மித்ரா டைம்ஸ்

தமிழ் & ஆங்கிலம் மாத இதழ்

MITRA TIMES - Tamil & English Monthly

மலர்: XIII இதழ்: 3 | செப்டம்பர் 2026 | ஆண்டு சந்தா ரூ.240/- | விலை ரூ.20/-

Vol.: XIII Issue: 3 | September 2026 | Annual Subscription Rs.240/- | Price Rs. 20

இயற்கை அறிவும்; செயற்கை அழிவும்!

- ஆசிரியர் கடிதம்

பத்திரிகை உலகில் 50 ஆண்டுகள்: மதுரை விஜயா கண்ணனின் "பொன்விழா" பயணம்

உடலுக்கு நன்மை தரும் கேரளா சிவப்பு அரிசி சாதம்!

அமெரிக்கா கடன் வாங்கினால் இந்தியாவுக்கு என்ன பாதிப்பு!

மொபைல் மீதான மோகம்: பாதிக்கப்படும் குழந்தைகள்!

த.வெ.க. Vs தி.மு.க.

தமிழக அரசியலில் ஏற்படுத்தும் மாற்றங்கள்! தடுமாற்றங்கள்

இயற்கை அறிவும் செயற்கை அழிவும்!

அன்புடையீர் வணக்கம்!

மனிதனாக பிறந்த ஒவ்வொருவருக்கும் ஆறறிவு இருக்கும் என்பது உண்மை. அது இயற்கையாகவே அமைந்த அறிவு.

மக்களுக்கு இயற்கை அறிவு (Innate knowledge அல்லது இயற்கையான புரிதல்) என்பது அவர்களின் அனுபவங்கள், சுற்றுப்புறச் சூழல் மற்றும் பாரம்பரியம் மூலம் ஏற்படுகிறது

இயற்கையோடு இணைந்து வாழுதல், பருவ மாற்றங்களை கவனித்தல் மற்றும் விவசாயம் , நெசவு, பால் உற்பத்தி, கால்நடை பராமரிப்பு போன்ற செயல்களால் மக்கள் இயற்கையைப் பற்றிய அறிவைப் பெறுகின்றனர்.

நமது முன்னோர்கள் இயற்கையைப் பற்றி அறிந்து வைத்திருந்த குறிப்புகள் மற்றும் கதைகள் தலைமுறை தலைமுறையாக மக்களிடம் கொண்டு செல்லப்படுகின்றன.

நாம் வாழும் இடம், மலைகள், காடுகள் மற்றும் நதிகள் போன்ற இயற்கைச் சூழல் நம் மூளைக்கு இயற்கையான புரிதலைத் தருகிறது.

இயற்கையின் ரகசியங்களை அறியும் மனிதனின் தேடல் மற்றும் எல்லாவற்றையும் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆர்வம் இயற்கை அறிவை வளர்க்கிறது.

நீர், நிலம், நெருப்பு, ஆகாயம் ,காற்று ஆகியவற்றை பராமரிப்பதிலும் பாதுகாப்பதிலும் மிகுந்த அக்கறையோடு அந்நாளில் இருந்தனர் என்பது உண்மை. ஆனால் காலம் மாற மாற இயற்கையாக இருந்த அறிவு என்பது கொஞ்சம் கொஞ் சமாக மனிதனை விட்டு மாறி இருக்கிறது என்பது ஒப்புக் கொள்ளக்கூடிய உண்மை. குறிப்பாக மனித பழக்க வழக்கங்களான உணவு, உடை, உறக்கம் ஆகியவற்றை பயன்படுத்துவதில் மனிதன் இயற்கைக்கு

மாறாக தற்போது நடக்க ஆரம்பித்து விட்டான். அதற்கு ஏற்றார் போல நவீன காலத்தில் தொழில்நுட்பம் வேகமாக வளர்ந்து வருவதால் மனிதன் தன்னுடைய இயற்கை தந்த வரத்தை அறிவை பயன்படுத்தாமல் வாழ்ந்து கொண்டிருக்கிறான் என்பது கவலைக்குரிய ஒன்றாக மாறிவிட்டது.

நமது முன்னோர்கள் இயற்கையில் விளைந்த பொருட்களைக் கொண்டு, உணவையே மருந்தாகப் பயன்படுத்தி ஆரோக்கியமாக வாழ்ந்தனர்.

மரங்கள், விலங்குகள், நீர் மற்றும் நிலத்தை மதித்து பாதுகாக்கும் முறையைக் கொண்டிருந்தனர். இயற்கையான சூழல் மனிதனின் மன அழுத்தத்தைக் குறைத்து, அமைதியான மற்றும் மகிழ்ச்சியான வாழ்க்கையைத் தந்தது.

தற்கால நிலைநவீன நாகரிகம் மற்றும் தொழிற்கூடங்களின் பெருக்கத்தால் மனிதன் இயற்கையைவிட்டு விலகி வருகிறான்.

இயற்கை வளங்களைச் சுரண்டுவதால் பல்வேறு நோய்களும் சுற்றுச்சூழல் மாசுபாடும் ஏற்படுகின்றன.

இயற்கை தந்த கொடையினால் குறைந்தபட்சம் 80 ஆண்டுகள் வாழ்ந்த மனிதன் ஆயுட்காலம் குறைந்து இன்றைக்கு இளம் வயதிலேயே இறப்புகள் தவிர்க்கப் பட முடியாத ஒன்றாக அமைந்துவிட்டது.

மனிதனின் இன்றைய நடைமுறை வாழ்க்கையில் எல்லாமே வேகமாக பயன்படுத்த வேண்டிய கட்டாயத்துக்கு எல்லோரும் தள்ளப்பட்டு இருக்கிறார்கள். முதலில் உணவுப் பழக்கத்தை எடுத்துக் கொள்வோம். நம் முன்னோர்கள் ஆட்டுக்கல், அம்மி ,குழவி, பயன்படுத்தி உணவுகளை தயாரித்தார்கள். கால விரயத்தை கணக்கில் கொண்டு இந்த முறையை தவிர்த்து இது அப்படியே கிரைண்டர்,மிக்ஸி,ஜார் என்று கைகளுக்கு பதிலாக, செயற்கையாக மெஷின்கள் உணவு தயாரிப்பதற்கு பயன்படுத்தப்பட்டது. பின்னர் அரவை தயாரிக்கும் தனி நபர்கள் இடத்தில் கொடுத்து உணவு பொருட்களை தயார் செய்து கொண்டார்கள். ஆனால் தற்போது ரெடிமேட் என்கிற பெயரில் பிளாஸ்டிக் அவர்களின் அடைத்து வைக்கப்பட்டு அதை வாங்கி வந்து உடனடியாக சமைத்து சாப்பிடுகிறார்கள்.

இப்படி செயற்கையாக தயாரிக்கப்படும் உணவுப் பொருட்களால் உடலுக்கு கேடு விளைகிறது என்பது மறுக்கப்பட முடியாத உண்மை. இதனால் ஆரோக்கியம் பாதிக்கப்பட்டு மருத்துவரை பார்க்கக் கூடிய சூழல் வந்துள்ளது. எப்படி உணவு பொருட்கள் தயாரிப்பதற்கு தனித்தனியாக இயந்திரங்கள் வந்து விட்டதோ அதைப்போல மனிதனுடைய ஒவ்வொரு நோய்க்கும், ஒவ்வொரு உறுப்புக்கும் தனித்தனி மருத்துவர்கள் மூலம் சிகிச்சை பெறுகின்றனர். உணவு பழக்கவழக்கங்கள் , இரவில் வெகு நேரம் தூங்காமல் இருந்து கண் விழித்து அதனாலே ஏற்படும் உடல் அசதிகள் பின்னாளில் பெரிய பிரச்சனைக்கு ஆளாக நேரிடுகிறது. அதைப்போல பொழுதுபோக்குகளும் தகவல் தொடர்பு வசதிகளும் மனிதனின் அன்றாட வாழ்க்கைக்கு எந்தவித இடையூறும் இல்லாமல் பயன்படுத்தப்பட்டு வந்தன. ஆனால் காலப்போக்கில் அத்தகைய சாதனங்கள் ஒவ்வொரு மனிதனையும் தன் கட்டுப்பாட்டுக்குள் வைத்து அவனது வாழ்க்கை முறையை சிதைத்து விடுகிறது.

பொழுதுபோக்கு அம்சம் என்பது அந்த நாளில் தெருக் கூத்தில் தொடங்கியது. பின்னர் அது மேடை நாடகமாக, திரைப்படமாக, சின்னத்திரை தொடர்கள் என்று தொடங்கி இன்று தனது கைகளுக்குள் எதை வேண்டுமானாலும் தெரிந்து கொள்ளலாம் என்கிற அளவுக்கு அறிவியல் முன்னேறிவிட்டது. உலகம் முழுவதும் எங்கோ ஒரு மூலையில் என்ன நடக்கிறது என்பதை அறிந்து கொள்கின்ற வகையிலும் தன் விரும்புகின்ற திரைப்படத்தை எப்போது வேண்டுமானாலும் பார்த்துக் கொள்ளலாம் என்கிற சூழலிலும் செல்போன் பயன்படுவதால் மனிதன் அதில் மூழ்கி விடுகிறான். அறிவுக்கு பயன்படும் இந்த சாதனங்கள் அழிவுக்கும் பயன்படுகிறது என்பதை ஒப்புக் கொள்ள வேண்டும். இதனால் மனிதனின் உடல்நிலை பாதிக்கப்பட்டு, மன உளைச்சல் ஏற்படுகிறது.

புலிவால் பிடித்த கதையாக மனிதன் இன்றைக்கு தொழில்நுட்பத்தை பயன்படுத்துவதிலும் அதிலிருந்து மீள முடியாமலும் தவித்துக் கொண்டிருக்கிறான் என்பதும், பல குற்றங்களுக்கு அது அடிப்படையாக அமைந்து சமூக சீர்கேடு ஏற்படுவதையும் கவனத்தில் கொள்ளும்போது அன்றைக்கு மனிதனை இயற்கை அறிவு தன்னை உணர்ந்து செயல்பட்ட நிலையும் இன்று செயற்கை அழிவால் தன்னிலை மறந்து தவிப்பதையும் பார்க்கும்போது பரிதாபமாக உள்ளது. இது உணர்ந்து தேவையான நேரத்தில் பயன்படுத்தி மீதி நேரத்தில் தன்னை தற்காத்துக் கொள்ள வேண்டிய சூழலுக்கு மனிதன் மாற வேண்டும். அது அவனுக்கும் நாட்டுக்கும் நல்லது என்பதை அவன் உணர வேண்டும்.

- எம்.எஸ். மூர்த்தி

த.வெ.க. VS தி.மு.க.

தமிழக அரசியலில் ஏற்படுத்தும் மாற்றங்கள்! தடுமாற்றங்கள்

நடைபெற்று முடிந்த சட்டமன்றத் தேர்தல் பிரச்சாரத்தில் தமிழக வெற்றி கழகத்தின் தலைவர், இன்றைய முதல்வர் திரு . ஜோசப் விஜய் அவர்கள் தொடர்ந்து எல்லா பொதுக்கூட்டங்களிலும் இறுதி வரையில் சொல்லிக் கொண்டிருந்த ஒரே வார்த்தை இங்கே இரண்டு பேருக்கு தான் போட்டி ஒன்று TVK இன்னொன்று DMK. என்று சொன்னார். தேர்தலுக்குப் பிறகு அதில் ஏதும் மாற்றம் இருப்பதாக தெரியவில்லை. மாறாக அதிகமாகிக் கொண்டு தான் போகிறது.

தமிழக சட்டசபைக்கு உள்ளேயும், வெளியேயும் வைக்கப்படுகின்ற வாதங்கள், அறிக்கைகள், பேட்டிகள், தொலைக்காட்சி விவாதங்கள் அனைத்துமே த.வெ.க VS தி.மு.க. என்ற நிலைமையை இருந்து வருகிறது. இதனால் ஏற்பட்டிருக்கிற அரசியல் மாற்றங்கள் தடுமாற்றங்களை கவனிக்க வேண்டியது அவசியம்.

தேர்தலின் போது தங்களோடு கூட்டணியில் இருந்த கட்சிகள் தங்கள் மீது விமர்சனம் செய்கின்ற அளவுக்கு தி.மு.கவுக்கு அரசியல் நெருக்கடியை உருவாக்கப்பட்ட சூழல் நன்றாக தெரிகிறது. முதலில் கவர்னர் ஆட்சி இங்கு வரக்கூடாது என்பதற்காக தங்களால் அவர்கள் அனுப்பி வைக்கப்பட்டார்கள் என்று எண்ணிக் கொண்டிருந்தது தி.மு.க.

ஆனால் த.வெ.க. அமைச்சரவையில் இடம்பெற்ற பிறகு அந்தக் கட்சிகளிடையே திமுக உடன் இருந்த இணக்கம் கொஞ்சம் கொஞ்சமாக விலகி சென்றதோடு மட்டுமல்லாமல் எதிர் திசையில் இருந்து எதிர்ப்பு அரசியலை முன்னெடுக்கின்ற கட்சிகளாக மாறிவிட்டது.

ஆட்சி அமைக்க போதிய ஆதரவு

இல்லாத போது முதலில் சென்று ஆதரவு கொடுத்தது காங்கிரஸ். இதை திமுகவால் ஜீரணிக்க முடியவில்லை.

காங்கிரஸுக்குத் தனித்து போட்டியிட பலம் உள்ளதா?" என திமுக மூத்த தலைவர் கே.என். நேரு கேள்வி எழுப்ப, "திமுகவின் கடந்தகால வெற்றிகளுக்கு காங்கிரஸின் ஆதரவும், ராகுல் காந்தியின் பாரத் ஜோடோ யாத்திரையுமே காரணம்" என காங்கிரஸ் எம்.எல்.ஏ தாரகை கத்பர்ட் பதிலடி கொடுத்துள்ளார்.

“ராகுல் காந்தி மற்ற மாநிலங்களுக்கும் அதே யாத்திரை போனாரு அங்கே ஏன் சீட்டு கிடைக்கவில்லை தமிழ்நாட்டில் தான் 10 சீட் கிடைத்தது அது திமுக வினால்தான்” என்று முன்னாள் அமைச்சர் நேரு பதில் சொன்னார்.

உயர் கல்வித் துறை அமைச்சர் விஸ்வநாதன் பேசிக் கொண்டிருந்ததை பார்த்து முன்னாள் அமைச்சர் கே என் நேரு"என்னங்க ஒவ்வொரு செய்தியும் இரண்டு முறை வாசிக்கிறாரே அவர்

மித்ரா டைம்ஸ்

மித்ரா - 13 செப்டம்பர் 2026 டைம்ஸ்- 3

ஆசிரியர்/வெளியீட்டாளர்:
திரு .எம். எஸ். மூர்த்தி

நிர்வாக ஆசிரியர்:
திருமதி .சுஜாதா மூர்த்தி

செய்தி ஆசிரியர்:
மணவூர் கி.விடாரண்யம்
9789837069

இதன் சிறப்பு ஆலோசகர்கள்:
Dr. **ஆ. தமிழ்மாறன்** எம்.ஏ.எம்.பில்
இயக்குனர் **மு.இரவீந்திரன் (எ) ரவி பார்கவன்**
எஸ்.ரங்கராஜ்
ஆர் .சையது சித்திக்

நிர்வாக அலுவலர்;
ஆர். குணசேகரன்

செய்தி இணை ஆசிரியர்கள்:
மதுரை விஜயா கண்ணன்
கோவை பி.முத்துராஜ்
சென்னை ராயபுரம் வி. குருசாமி

திருவள்ளூர் து.சண்முகம் எம் .ஏ

சட்ட ஆலோசகர்;
வி.என்.பிரசாத் எம்.ஏ.பி.எல்.

செய்தியாளர்கள்:
பி.வினோத்
பா. விஜயலட்சுமி
ராஜேஷ் கணேஷன்

வடிவமைப்பு:
vidapublications@gmail.com

சந்தா மேலாளர்;
வி.சுபத்ரா
9003107102

அலுவலகம்:
001 இன்ஞ்சக்கல் பிளாக்
சித்ரா அவென்யு
9 சூளைமேடு ஹை ரோடு
சென்னை. 94
தொடர்புக்கு:
044-23744661,23743007/08
Mitra times 2015@gmail.com
www.mitraimes.com

உள்ளே...

முதியோர் பராமரிப்பு சவாலா? கடமையா? **9**

உலக அதிசயங்கள் நம்ப முடியாத 7 உண்மைக் கதைகள் **13**

வெற்றிப் படிக்கட்டுகளால் வாழ்க்கை பாடத்தைச் சொன்ன வசந்தகுமார்! **16**

கல்லீரலை சுத்தம் செய்யும உலர் திராட்சை! **21**

உடலுக்கு நன்மை தரும் கேரளா சிவப்பு அரிசி சாதம்! **25**

நண்பர்கள் பற்றாக்குறை! **39**

கவிஞராக இருக்கலாம். அதுக்காக இப்படியா? என்று கேட்டதும் சபையில் சிரிப்பொலி கேட்டது. "அறுபது ஆண்டுகளுக்குப் பிறகு காங்கிரஸ் அமைச்சரவையில் பங்கு பெற்றது உங்களுக்கு ஒப்புக்கொள்ள முடியவில்லை" என்று அமைச்சர் விஸ்வநாதன் பதில் சொன்னார்.

இதேபோல விடுதலை சிறுத்தைகள் கட்சியில் இருந்து அமைச்சரவையில் சேர்ந்துள்ள அமைச்சர் வன்னியரசு அவர்கள் த.வெ.க—தி.மு.க மோதலின் போது ஏற்படுகின்ற விவாதங்களுக்கு நடுவில், திமுகவுக்கு எதிராக விமர்சனம் வைக்கிறார்.

ஆனால் அக்கட்சியின் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ஆளூர் ஷாநவாஸ் அவர்கள் அரசுக்கு எதிரான போராட்டங்களில் பங்கேற்று தமிழக அரசை விமர்சிக்கிறார்.

பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை கொள்கை விளக்கக் குறிப்பேட்டில், தந்தை பெரியார், அண்ணல் அம்பேத்கர், பண்டிட் ஜவஹர்லால் நேரு ஆகியோரின் பெயர்கள் நீக்கப்பட்டதற்கு தங்கள் கண்டனங்களை விடுதலை சிறுத்தைகள் கட்சி முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் சிந்தனைச் செல்வன் அவர்களும், இந்திய கம்யூனிஸ்ட் மார்க்சிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு தலைவர் மு வீரபாண்டியன் அவர்களும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

தமிழக அரசியல் களம் தற்போது தி.மு.க மற்றும் அ.தி.மு.க ஆகிய இரு திராவிடக் கட்சிகளின் வழக்கமான போட்டியிலிருந்து மாறி, த.வெ.க vs தி.மு.க என்ற புதிய அதிகார மைய மோதலாக உருவெடுத்துள்ளது.

இதற்கு காரணங்களாக பல்வேறு விஷயங்கள் பேசப்படுகிறது.

முந்தைய தி.மு.க ஆட்சியில் கொண்டுவரப்பட்ட முக்கியத் திட்டங்களின் பெயர்களை முதலமைச்சர் விஜய் தலைமையிலான த.வெ.க அரசு மாற்றி வருகிறது. உதாரணத்திற்கு, 'முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்' என்பது தற்போது பெருந்தலைவர் காமராஜர் காலை உணவுத்

திட்டம் எனப் பெயர் மாற்றப்பட்டுள்ளது.

இலவச வேட்டி, சேலை வழங்கும் திட்டத்தில் 8 முழ வேட்டிக்கு பதிலாக 4 முழ வேட்டியாக மாற்றியமைப்பது போன்ற த.வெ.க அரசின் செயல்பாடுகளை தி.மு.க கடுமையாக விமர்சித்து வருகிறது.

பரந்தூர் பசுமை விமான நிலைய திட்டத்தை த.வெ.க அரசு கைவிட்டதை அடுத்து, சட்டப்பேரவையில் இரு கட்சிகளுக்கும் இடையே கடும் வாக்குவாதம் ஏற்பட்டது. தி.மு.கவின் 'ஜி ஸ்கொயர் மாப்பிள்ளை' (சபரீசன்) மற்றும் த.வெ.க தரப்பின் 'லாட்டரி மருமகன்' போன்ற தனிநபர் அரசியல் விமர்சனங்கள் அவையில் அனல் பறந்தன.

தமிழக அரசியல் களம் இன்றைய சூழலில் தி.மு.க VS த.வெ.க. என்று சூடு பிடித்துக் கொண்டிருக்கிறது. அடுத்த வருகின்ற உள்ளாட்சித் தேர்தல் அதற்கு அடுத்து வர இருக்கின்ற நாடாளுமன்ற தேர்தலுக்கு இதே போக்கு நீடிக்கிறதா அல்லது மாற்றம் இருக்குமா என்பதை பொறுத்திருந்து பார்க்க வேண்டும்.

ஆனால் திடீரென்று களத்தில் கட்சிகளிடையே ஒரு தடுமாற்றம் உருவாகி இருக்கிறது. முதலமைச்சர் விஜய் தலைமையிலான தமிழக வெற்றிக் கழகம் (த.வெ.க), கூட்டணிக் கட்சிகளின் (காங்கிரஸ், விசிக, கம்யூனிஸ்ட் கட்சிகள்) ஆதரவுடன் ஆட்சி அமைத்துள்ள சூழலில், தற்போது கொள்கை முடிவுகளிலும் நிர்வாகத்திலும் அக்கட்சிகள் பல்வேறு குடைச்சல்களையும் நெருக்கடிகளையும் கொடுத்து வருகின்றன. அடுத்த நாடாளுமன்றத் தேர்தலில் ராகுல் காந்தியைப் பிரதமர் வேட்பாளராக த.வெ.க ஆதரிக்க வேண்டும் என காங்கிரஸ் அமைச்சர் எஸ். ராஜேஷ் குமார் கெடு விதித்துள்ளார்; இல்லையெனில், தமிழக அமைச்சரவையில் இருந்து காங்கிரஸ் அமைச்சர்கள் விலகுவோம் என எச்சரித்துள்ளனர்.

விலைவாசி உயர்வை எதிர்த்து இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (CPI) அரசுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளதுடன்,

தலைமைச் செயலருக்கு எதிராக மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி (CPM) போர்க்கொடி தூக்கியுள்ளது.

நடப்பு பட்ஜெட் கூட்டத்தொடர் மற்றும் அரசின் முக்கிய கொள்கை முடிவுகளில் தங்களது கோரிக்கைகளுக்கு முன்னுரிமை தர வேண்டும் என விடுதலைச் சிறுத்தைகள் கட்சி (VCK) த.வெ.க தலைமைக்கு நெருக்கடி கொடுத்து வருகிறது.

கூட்டணி ஆட்சியில் நிலவும் இத்தகைய தலையீடுகள் மற்றும் நெருக்கடிகளைத் தவிர்த்து, த.வெ.க சொந்த பலத்தில் நிலையான ஆட்சி நடத்த முதல்வர் விஜய் திட்டமிட்டுள்ளார். இதற்காக, தற்போது காலியாக உள்ள சட்டசபைத் தொகுதிகளுக்கு உடனே இடைத்தேர்தல் நடத்தக் கோரி சென்னை உயர்நீதிமன்றத்தில் த.வெ.க தரப்பில் அவசர பதில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இடைத்தேர்தலில் கூடுதல் இடங்களை வென்று தனிப்பெரும்பான்மை பலத்தைப் பெற்றால் மட்டுமே கூட்டணிக் கட்சிகளை ஓரம் கட்டிவிட்டு சுதந்திரமாகச் செயல்பட முடியும் என த.வெ.க தலைமை கருதுகிறது.

இப்படி தினம் தினம் ஒரு அரசியல் மாற்றம் கட்சிகளிடையே தடுமாற்றத்தை ஏற்படுத்தி இருக்கிறது என்பதை மறுப்பதற்கு இல்லை.

– தம்பி முருகானந்தம்

முதியோர் பராமரிப்பு சவாலா? கடமையா?

சமீபத்தில் திருவள்ளூர் மாவட்டத்தில் மணவூர் என்ற ஊரில் மகன் தன் தாயை காப்பாற்ற முடியாமல் ரயிலில் தள்ளி கொலை செய்த சம்பவம் மிகுந்த பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. இதனால் முதியோர் பராமரிப்பு சவாலா கடமையா என்ற விவாதம் ஏற்பட்டுள்ளது. முதியோர் பராமரிப்பு என்பது உடல்நலம், மனநலம் மற்றும் சமூக மாற்றங்கள் காரணமாக இன்று பலரும் எதிர்கொள்ளும் மிகப்பெரிய சவாலாக உள்ளது. நீரிழிவு, இதய நோய், மூட்டுவலி மற்றும் ஞாபக மறதி போன்ற நாள்பட்ட நோய்களால் முதியவர்கள் பாதிக்கப்படுகின்றனர்.

முதியோருக்கான பிரத்யேக மருத்துவ வசதிகள் (Geriatric care) மற்றும் கிராமப்புறங்களில் போதுமான மருத்துவமனைகள் இல்லாதது பெரும் குறையாகும். முதியவர்களைத் தொடர்ந்து கவனித்துக் கொள்ளும் குடும்பத்தினருக்கு ஏற்படும் உடல் மற்றும் மன அழுத்தம் அதிகமாகிறது. மருத்துவச் செலவுகள் மற்றும் முறையான பராமரிப்புச் செலவுகள் குடும்பங்களின் பொருளாதாரத்தைப் பாதிக்கிறது.

நகர்ப்புற கிராமப்புற வேறுபாடுகள்: கிராமப்புறங்களில் மருத்துவ வசதிகளும் பராமரிப்பு மையங்களும் இல்லாததால் சவால்கள் இன்னும் அதிகமாக உள்ளன.

2050 ம் ஆண்டில் இந்திய மக்கள்தொகையில் ஐந்தில் ஒருவர் 60 வயதுக்கு மேற்பட்டவர்களாக இருப்பார்கள் என்று 'டிரான்ஸ்பார்ம் ரூரல் இந்தியா' வெளியிட்டுள்ள ஆய்வறிக்கை தெரிவித்துள்ளது. அந்த ஆண்டில் இந்தியாவில் சுமார் 34 கோடியே 70 லட்சம் பேர் 60 வயதுக்கு மேற்பட்டவர்களாக இருப்பார்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது.

இவர்களில் 10 பேரில் சுமார் 7 பேர் கிராமப்புறங்களில் வசிப்பவர்களாக இருப்பார்கள் என்பதால், முதியோர் பராமரிப்பு தொடர்பான சவால்கள் கிராமப்புறங்களில் அதிகமாக உருவாகும் நிலை ஏற்படக்கூடும். வளர்ந்த பல நாடுகளில் பொருளாதார ரீதியாக வலுப்பெற்று, உயர் வருமானம் கொண்ட நாடுகளாக மாறிய பின்னரே முதியோர்களின் எண்ணிக்கை அதிகரித்ததாக ஆய்வறிக்கை சுட்டிக்காட்டுகிறது.

ஆனால் இந்தியா குறைந்த வருமான நிலையிலேயே முதியோர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் வகையிலான மக்கள்தொகை மாற்றத்தை எதிர்கொண்டு வருகிறது. இதனால் முதியோர் பராமரிப்பு, சுகாதாரம், சமூகப்பாதுகாப்பு உள்ளிட்ட துறைகளில் முன்கூட்டியே திட்டமிட வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

நீண்ட ஆயுளுடன் வாழ்வது முன்னேற்றத்தின் அறிகுறியாக இருந்தாலும், அதிகரித்து வரும் முதியோர் மக்கள்தொகைக்கு ஏற்ப சுகாதாரம், பராமரிப்பு, சமூகப்பாதுகாப்பு மற்றும் வேலைவாய்ப்பு அமைப்புகளை முன்கூட்டியே உருவாக்குவது அவசியம் என ஆய்வறிக்கை சுட்டிக்காட்டுகிறது.

2050ம் ஆண்டை நோக்கி இந்தியா நகரும் நிலையில், முதியோர் பராமரிப்பு என்பது குடும்பங்களின் தனிப்பட்ட பொறுப்பாக மட்டுமே இல்லாமல், சமூக அளவில் திட்டமிட்டு எதிர்கொள்ள வேண்டிய முக்கிய சவாலாக உருவெடுத்து வருகிறது.

உலக அரங்கில் திருக்குறள் பெருமையை எடுத்துச் சொல்லும் பிரதமர் மோடி: மத்திய அமைச்சர் எல் முருகன் மத்திய அமைச்சர் எல்.முருகன் புகழாரம்!

திருக்குறளின் சிறப்பை உலக அரங்கில் எடுத்துரைத்த பிரதமர் மோடிக்கு மத்திய இணை மந்திரி எல்.முருகன் பாராட்டு தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் தனது எக்ஸ் தள பதிவில் கூறி இருப்பதாவது:

பாரதப் பிரதமர் மோடிஜி அவர்கள் தாஷ்கண்ட், உஸ்பெகிஸ்தானில் திருக்குறளின் சிறப்பையும், அதன் உலகளாவிய முக்கியத்துவத்தையும் எடுத்துரைத்தது ஒவ்வொரு தமிழருக்கும் பெருமை தரும் தருணம்.

"பல நூற்றாண்டுகளுக்கு முன்பு தமிழில் எழுதப்பட்ட திருக்குறள், இன்றும் ஆன்மிகம், தத்துவம் மற்றும் நடைமுறை வாழ்க்கை என அனைத்து துறைகளிலும் ஆழ்ந்த உத்வேகத்தை அளிக்கிறது" என்று பிரதமர் அவர்கள் குறிப்பிட்டார்.மேலும், திருக்குறளை உஸ்பெக் மொழியில் மொழிபெயர்க்கும் பணியை முன்னெடுக்க வேண்டும் என்ற பிரதமரின் அழைப்பு, உலகின் தொன்மையான மொழிகளில் ஒன்றான தமிழின் செழுமையையும், திருவள்ளுவரின் பேரறிவையும் உலகெங்கும் கொண்டு செல்லும் மகத்தான முயற்சியாகும். திருக்குறள் உலகப் பொதுமறை என்பதை பிரதமரின் இந்த வார்த்தைகள் மீண்டும் உலகிற்கு எடுத்துரைக்கின்றன. இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

தாஷ்கன்ட் பல்கலைக்கழகத்தின் 80வது ஆண்டு விழாவில் பிரதமர் மோடி சிறப்புரையாற்றினார். மிகச்சிறந்த வாழ்வியல் நூலான திருக்குறளை உஸ்பெக் மொழியில் மொழிபெயர்க்குமாறு அப்பல்கலைக்கழகத்தைக் கேட்டுக்கொண்டார்.

அரிய தமிழ்ப் படைப்போடு உஸ்பெகிஸ்தான் மக்கள் ஆழமான பிணைப்பை உணர இது நல்வாய்ப்பாக அமையும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

பல நூற்றாண்டுகளுக்கு முன்பு இந்தியாவில் இயற்றப்பட்ட திருக்குறள் ஆன்மிகம், தத்துவம், வாழ்க்கைக்கான ஆழ்ந்த ஞானத்தைக் கொண்ட ஒரு மகத்தான படைப்பு என்று புகழாரம் சூட்டினார்.

"மனித வாழ்க்கையின் அனைத்துத் தளங்களிலும் நல்வழி காட்டக்கூடிய இந்த நூல், உலகளவில் தொடர்ந்து பலருக்கும் பெரும் உத்வேகத்தை அளித்து வருகிறது," என்றார் திரு மோடி.

தகவல்:

பட்டறை பெரும் புதூர் டி.ஆர்.குமார்

கைதிகள் வெளியே சென்று வேலை செய்துவிட்டு வரலாம்!

ஜார்க்கண்ட் மாநிலத்தில் கைதிகள் சிறைக்கு வெளியே சென்று வேலை செய்ய அனுமதி அளிக்கப்பட்டு உள்ளது. தங்கள் குடும்பத்தினரின் வாழ்வாதாரத்துக்காக இந்த திட்டத்தை செயல்படுத்த உள்ளது.

ஜார்க்கண்ட் மாநிலத்தில் சிறையில் இருக்கும் கைதிகள் அவர்களின் வீட்டு சூழ்நிலை மற்றும் வாழ்வாதாரம் கருத்தில் கொண்டு தகுதியான கைதிகள் பகல் நேரத்தில் சிறைக்கு வெளியே சென்று வேலை பார்த்துவிட்டு, மாலையில் மீண்டும் சிறைக்குத் திரும்பும் புதிய திறந்தவெளிச் சிறை திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. தேர்ந்தெடுக்கப்பட்ட கைதிகளுக்கு மட்டுமே இந்தச் சலுகை வழங்கப்படும் என்றும் தகவல் வெளியாகி இருக்கிறது.

இந்த திட்டத்தின்படி கைதிகள் காலை 6 மணி அல்லது 7 மணி அளவில் சிறையிலிருந்து வெளியே சென்று வேலை பார்க்கலாம். வெளியே சென்று வேலை செய்யும் கைதிகள் மாலை 6 மணிக்குள் சிறைக்கு திரும்ப வேண்டுமெனவும் மாநில அரசு உத்தரவிட்டுள்ளது.

இந்தத் திட்டம் முதற்கட்டமாக ஜார்க்கண்டில் உள்ள பிர்சா முண்டா மத்திய சிறை, ஜெய் பிரகாஷ் நாராயண் மத்திய சிறை, ஹசாரிபாக் காசிடிஹ் மத்திய சிறை, தும்கா மத்திய சிறை ஆகிய நான்கு மத்திய சிறைகளில் தொடங்கப்படுகிறது.

இது தொடர்பாக பேசிய அதிகாரிகள், "சிறைக்குள் நன்னடத்தை மற்றும் ஒழுக்கத்தைக் கொண்ட கைதிகள் மட்டுமே இந்தத் திட்டத்திற்குத் தேர்வு செய்யப்படுவார்கள். மேலும் வெளியே செல்லும் கைதிகள் தொடர்ந்து சிறை அதிகாரிகளால் கண்காணிக்கப்படுவார்கள்" என்றனர்.

எருமைக்கு உரிமை கொண்டாடிய இருவர்!

மருத்துவ பரிசோதனைக்கு உத்தரவிட்ட காவல்துறை!

பிகாரின் சியோத்ரா கிராமத்தைச் சேர்ந்த சூரஜ் யாதவும், அருகில் உள்ள கிராமத்தைச் சேர்ந்த பிரகாஷ் மாஞ்சியும் ஒரே எருமைக்கு உரிமை கோரி வருகின்றனர்.

இந்த விவகாரம் அரசியல் சர்ச்சையாக உருவெடுத்த நிலையில், பிரச்னைக்கு விரைவில் அறிவியல் ரீதியாகத் தீர்வு காண காவல் துறை ஐ.ஜி. விகாஸ் வைபவ் உத்தரவிட்டார்.

இதையடுத்து, திருடப்பட்டதாகக் கூறப்படும் எருமைக்கும், அதன் குட்டி எனக் கூறப்படும் மற்றொரு எருமைக்கும் டிஎன்ஏ பரிசோதனை நடத்தி, உரிமை தொடர்பான சர்ச்சைக்குத் தீர்வு காண முடிவு செய்யப்பட்டது.

மகத் ரேஞ்ச் காவல்துறை ஐஜி விகாஸ் வைபவ் பிபிசியிடம் கூறுகையில், இரு தரப்பினரும் தங்களது உரிமைக் கோரலில் உறுதியாக இருப்பதால், அறிவியல் ஆதாரங்களின் உதவியை நாட வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது என்றார்.

உரிமை கோரும் இரு தரப்பினரிடமும் பேசிய போலீசார், எருமை தொடர்பாக அவர்கள் வைத்திருக்கும் பதிவுகளை சமர்ப்பிக்குமாறு கேட்டுள்ளனர். இந்தப் பதிவுகளில், எருமையின் இனம் மற்றும் அதன் பரம்பரை தொடர்பான தகவல்கள் இருக்கலாம்.

இந்தச் சர்ச்சையின் மையப்புள்ளியாக இருக்கும் எருமையின் டிஎன்ஏ, அது ஈன்றதாகக் கூறப்படும் கன்றின் டிஎன்ஏவுடன் ஒப்பிடப்படும்.

இந்த விவகாரம் தொடர்பான விசாரணை இன்னும் நடைபெற்று வருகிறது. பரிசோதனை முடிவுகள் கிடைத்த பிறகு, உரிமை உறுதிசெய்யப்படும் நபரிடம் அந்த எருமை ஒப்படைக்கப்படும் என்று அறிவித்தார் அந்த காவல் உயர் அதிகாரி.

உலக அதிசயங்கள் நம்ப முடியாத 7 உண்மைக் கதைகள்

1. தானாக நகரும் கற்கள் - அமெரிக்கா

அமெரிக்கா கலிபோர்னியா பாலைவனத்தில் Death Valley-ல் ஒரு ஏரி உள்ளது Racetrack Playa. அங்கே 300 கிலோ கனமுள்ள பெரிய கற்கள் தானாகவே நகர்கின்றன. பின்னால் நீண்ட கோடு விட்டு செல்கின்றன. யாரும் தள்ளவில்லை.

100 வருடமாக மர்மமாக இருந்தது. பேய் என்று சொன்னார்கள். 2014ல் விஞ்ஞானிகள் கண்டுபிடித்தனர். குளிர்காலத்தில் ஏரியில் மெல்லிய பனி உருவாகும். பனிக்கு அடியில் தண்ணீர். காற்று அடிக்கும் போது பனி கற்களை தள்ளி நகர்த்துகிறது. மணிக்கு 5 மீட்டர் வேகத்தில் நகரும். ஆனால் யாரும் பார்த்ததில்லை, ஏனெனில் இரவில் நடக்கும்.

2. ஒரே நாளில் 2 முறை பிறந்த குழந்தை!

அமெரிக்காவில் ஒரு குழந்தை ஒரு நாளில் 2 முறை பிறந்தது. எப்படி?

டெக்சாஸில் Margaret Boemer என்ற பெண் 16 வார கர்ப்பமாக இருந்த போது குழந்தைக்கு Spina Bifida முதுகு தண்டு பிரச்சனை என்று கண்டுபிடித்தார்கள். டாக்டர்கள் ஒரு அதிசய அறுவை சிகிச்சை செய்தனர் தாயின் வயிற்றை திறந்து, குழந்தையை பாதி வெளியே எடுத்து, முதுகு

அறுவை சிகிச்சை செய்து, மீண்டும் உள்ளே வைத்து தைத்தனர்.

குழந்தை 2 முறை பிறந்தது முதல் முறை அறுவை சிகிச்சைக்காக, 2வது முறை 36 வாரத்தில் இயல்பாக. இப்போது அந்த குழந்தை Lynlee ஆரோக்கியமாக இருக்கிறாள். அவள் தான் உலகில் 2 முறை பிறந்த முதல் குழந்தை.

3. கடலுக்கு அடியில் இருக்கும் நகரம் - இந்தியாவில்!

குஜராத் கடற்கரையில் இருந்து 40 கிமீ தொலைவில் கடலுக்கு அடியில் ஒரு முழு நகரம் உள்ளது துவாரகா நகரம். கிருஷ்ணரின் துவாரகா என்று சொல்கிறார்கள்.

2001ல் இந்திய கடல் ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்தனர். கடலுக்கு அடியில் 36 மீட்டர் ஆழத்தில் பெரிய கோட்டை சுவர், தூண்கள், மண்பாண்டங்கள், மனித எலும்புகள். 9000 வருட பழமையானது. 7500 BC-யில் கடல் மட்டம் உயர்ந்து மூழ்கியதாக கருதுகிறார்கள். இது உண்மை என்றால், மகாபாரதம் 9000 வருட பழமையானது என்று ஆகும். இன்னும் ஆராய்ச்சி நடக்கிறது.

தமிழ்நாட்டில் பூம்புகார் கடலுக்கு அடியிலும் இதே போல் நகரம் உள்ளது.

4. மரம் இல்லாமல் வளரும் காடு -மிசோரம்

உலகில் எல்லா காட்டிலும் மரம்

இருக்கும். ஆனால் மிசோரம்ல் ஒரு காடு உள்ளது. அங்கே ஒரு மரம் கூட இல்லை. முழுக்க மூங்கில் மட்டும் தான். 1000 ஏக்கர் மூங்கில் காடு Mawphlang Sacred Forest.

ஆச்சரியம் என்னவென்றால், இந்த மூங்கில் 48 வருடத்திற்கு ஒரு முறை மட்டும் பூக்கும். 1959ல் பூத்தது, 2007ல் பூத்தது. பூத்ததும் எல்லா மூங்கிலும் பட்டுப்போய் விடும். அப்போது கோடி கணக்கில் எலிகள் வரும் - Mautam என்று பெயர். எலிகள் வயலை அழித்து பஞ்சம் வரும். மிசோரம் அரசு இதற்கு தனி திட்டமே வைத்துள்ளது. அடுத்து 2055ல் பூக்கும்.

5. வானத்தில் மிதக்கும் நதி - வெனிசுலா

வெனிசுலாவில் ஒரு நதி வானத்தில் ஓடுகிறது. பெயர் Catatumbo Lightning.

Maracaibo ஏரியில் இரவு 10 மணிக்கு மேல் வானத்தில் தொடர்ந்து மின்னல் அடிக்கும். ஒரு நிமிடத்திற்கு 28 முறை மின்னல். ஒரு வருடத்தில் 140-160 நாள், ஒரு நாளைக்கு 10 மணி நேரம் மின்னல் மட்டும் தான். சத்தம் இருக்காது, வெறும் வெளிச்சம் மட்டும்.

இதனால் அந்த ஏரி இரவில் பகல் போல வெளிச்சமாக இருக்கும். பழங்காலத்தில் கப்பல் ஓட்டுபவர்கள் இந்த மின்னலை கலங்கரை விளக்கமாக பயன்படுத்தினர். NASA சொல்கிறது இது உலகில் அதிக ஓசோன் உற்பத்தி செய்யும் இடம்.

காரணம் மலையில் இருந்து வரும் குளிர் காற்று, ஏரியில் இருந்து வரும் சூடான காற்று மோதி மின்னல் உருவாகிறது.

6. தமிழர்கள் கட்டிய கடைசி அதிசயம் கல்லணைக்கு அடுத்து?

இந்தோனேசியாவில் உள்ள Prambanan கோயில் 1000 வருட பழமையானது. அதை கட்டியது தமிழர்கள் சைலேந்திர வம்சம். கோயிலில் தமிழ் கல்வெட்டு உள்ளது. அங்கே இராமாயணம் முழுவதும் சிலையாக உள்ளது தமிழ் இராமாயணம்.

7. இன்னும் வளரும் மனிதன்

நேபாளத்தில் Khagendra Thapa Magar என்பவர் உலகின் குட்டி மனிதர் 67 செமீ உயரம் மட்டும். ஆனால் அவரது நண்பர் Nepal-ல் இருக்கும் இன்னொருவர் 25 வயதில் கூட வளர்ந்து கொண்டே இருக்கிறார். காரணம் - Growth Hormone அதிகம்.

அடுத்தவர் சொல்வதை அதிகம் சிந்திக்காதே!

யாரிடம் பேசும்போதும் நாம் கவனமுடன் இருக்க வேண்டும் அவர்கள் போகிறபோக்கில் அள்ளி வீசிவிட்டு சென்று விடுவார்கள்...

இரண்டு நபர்கள் சந்தித்து கொள்கிறார்கள்...

ஒருவர் : நீ எங்கே வேலை செய்கிறாய்?

மற்றவன்: இன்னாரின் நிறுவனத்தில்.

அவன் : எவ்வளவு சம்பளம் தருகிறார்கள்?

இவன்: 30 ஆயிரம் தான்.

அவன்: ஓ...ஹ்! இந்த வேலைக்கு இது போதாதே!

உன் முயற்சியை அவர்கள் மதிப்பதில்லை போல! வாழ்க்கை செலவுகளை எப்படி சமாளிக்கிறாய்? என்ற வார்த்தை குண்டை போட்டுவிட்டு அவன் சென்றுவிடுகிறான்.

இவனோ அவன் சொல்வது சரிதான், என்று கருதி வேலையில் ஆர்வம் குறைந்து, சலிப்புடனே மறுநாள் வேலைக்கு செல்கிறான். நிறுவன உரிமையாளரிடம் சம்பளம் கூட்டிக் கேட்கிறான். உரிமையாளரோ "முடியாது" என்கிறார். இவன் வேலையை விட்டு விடுகிறான். இப்போது இவன் வேலை இன்றி வெட்டியாக இருக்கின்றான்.

இரு பெண்கள் சந்திக்கின்றனர்.

ஒருவள்: உன் கணவன், உனக்கு குழந்தை பிறந்ததற்காக என்ன அன்பளிப்பு தந்தார்?

மற்றவள்: எதுவும் தரவில்லை.

அவள்: ஏன் இப்படி! உன்னைப் பற்றி அவரிடம் எந்த மதிப்பும் இல்லையா...?' பாசம் இல்லையா..? என்று அவள் சின்ன புகைச்சலை போட்டுவிட்டு சென்றுவிடுகிறாள்.

இவளின் மனதிலோ கணவனை பற்றிய மதிப்பு குறைகிறது. கவலையடைகிறாள்... கணவன் வந்தவுடன் கோபத்துடன் தர்க்கம் செய்கிறாள். அதனால் சண்டை முற்றி அவன் அவளை விவாகரத்து செய்துவிடுகிறான். இப்போது இவள் நிலை...

இது போன்றே...

இரு நண்பர்களுக்கு மத்தியிலும்...

தந்தை மகனுக்கு மத்தியிலும்...

இப்படியான கிண்டல் கிளறல்களை உண்டாக்கி பிரிவை உண்டாக்கும் நயவஞ்சகர்கள் நம்மிடையே நிறைய பேர் இருக்கத்தான் செய்கிறார்கள்.

ஏன் இன்னும் இதனை வாங்கவில்லை...? ஏன் இன்னும் திருமணம் முடிக்கவில்லை...? எவ்வளவு காலம்தான் இவரை சகித்துக் கொள்வாய்...? இப்படி ஏன் விட்டுக் கொடுக்க வேண்டும்...? இப்படிச் செய்யலாமா??? அப்படிச் செய்யலாமா???

இப்படி சிலரின் தேவையற்ற கேள்விகள், விவரமற்ற வார்த்தைகள், கிண்டிப் பார்க்கும் ஆர்வங்கள், கிளறிப் பார்க்கும் பழக்கங்கள் கேட்க அழகாகவும், பார்க்க புண்ணியம் போன்றும் தோன்றும்... ஆனால், அவைகளே வார்த்தை வடிவில் அவதாரம் எடுத்து சைத்தான்களாக வந்து, குடும்பங்களில் பெரும் வெடிப்பை தோற்றுவிக்கிறன, உறவுகளுக்குள் நீண்ட விரிசல்களை உண்டாக்கிவிடுகின்றன. சொந்த பந்தங்களை இன்னுமின்னும் பிரித்து வைத்துவிடுகின்றன. எனவே... பிரச்சினைகளை, பிரிவினைகளை தோற்றுவிக்கக் கூடியவர்களின் சொற்களை கவனத்தில் கொள்ளாதீர்.

வீடுகளுக்குச் சென்றால் குருடனாகவும் வெளியே வந்தால் ஊமையாகவும் இருந்து விடுங்கள்! நீங்கள் உங்கள் சுய சிந்தனையோடு இருங்கள்...

வெற்றிப் படிக்கட்டுகளால் வாழ்க்கை பாடத்தைச் சொன்ன வசந்தகுமார்!

மிகச் சிறிய அளவில் எளிமையாக வாழ்க்கையைத் தொடங்கி,வசந்த் அண்ட் கோ கடையை, தனி ஒருவனாகப் போராடி வித்தியாசமாகச் சிந்தித்து, இன்று 64 கிளைகளுடன் மிகப் பெரிய சாம்ராஜ்யமாக உருவாக்கி வர்த்தகத் துறையில் மாபெரும் சாதனை படைத்த தொழிலதிபர், பேச்சாளர், அரசியல் ஆளுமை ஆகிய சிறப்புகளை கொண்டவர் எச்.வசந்தகுமார்.

வெளிநாடு சென்று மேற்படிப்புகள் படித்தால் மட்டும் தான் தொழிலை அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் செல்ல முடியும் என்பதில்லை. அடித்தட்டில் இருந்து ஆரம்பித்து தன் அனுபவம் மூலம் மற்றவர்களுக்கு முன்மாதிரியாக தொழிலில் ஒரு புதியபாதை அமைத்து வெற்றி பெற்ற தொழிலதிபராக உயர முடியும் என்பதற்கு உதாரணமாகத் தன் வாழ்க்கையை விட்டுச் சென்றவர் தான் வசந்த் அண்ட் கோ எச் வசந்தகுமார்.

வசந்த் அண்ட் கோ என்ற பெயரைக் கேட்டதுமே சிரித்த முகத்தோடு காட்சியளிக்கும் எச்.வசந்தகுமாரின் முகம் தான் மக்கள் மனதில் தோன்றும். அந்தளவிற்கு வீட்டு உபயோகப் பொருட்கள் விற்பனையில் தனக்கென தனியொரு அடையாளத்தை உருவாக்கி, தொழிலில் மட்டுமல்லாது அரசியல், பொழுதுபோக்கு ஊடகம் என பன்முகத் திறமையாளராகத் திகழ்ந்தவர் தான் வசந்தகுமார்.

கன்னியாகுமரி மாவட்ட அகஸ்தீஸ்வரம் என்ற ஊரில் 1950ஆம் ஆண்டு ஏப்ரல் 14 ஆம் தேதி பிறந்தவர் வசந்தகுமார். பள்ளிப் படிப்பை வெற்றிகரமாக முடிந்தவர், மேற்கொண்டு நேரடியாக கல்லூரிக்குச் செல்லாமல் தனது பட்டப்படிப்பை அஞ் சல் வழியில் தொடங்கினார். காரணம் வேலை பார்த்துக் கொண்டே படிப்பது தான் வசந்தகுமாரின் திட்டம்.

இதற்கிடையே 70களில் தனது மூத்த அண்ணன் குமரி அனந்தனுக்கு அரசியலில் உதவுவதற்காகச் சென்னை வந்தார். சென்னைப் பிடித்துப் போகவே அங்கேயே தங்கி விடுவது என முடிவெடுத்தார். அதன்படி அஞ்சல் வழியில் படித்துக் கொண்டே வி.ஜி.பி. நிறுவனத்தில் வீட்டுப் பொருட்கள் விற்பனையாளராகச் சேர்ந்தார்.

தவணை முறையில் பொருட்கள் வாங்கியவர்களிடம் பணம் வசூலிப்பது தான் வசந்தகுமாரின் வேலை. மாத சம்பளம் ரூ.70. எட்டு ஆண்டுகள் அங்கேயே வேலை பார்த்தார். அங்கு தான் வீட்டு உபயோகப் பொருட்கள் விற்பனை பற்றிய அனைத்து விசயங்களையும் அவர் கற்றுக் கொண்டார்.

தேவையான அனுபவத்தைப் பெற்றபின் இனி தனது சொந்தக் காலில் நிற்பது என துணிந்து முடிவெடுத்தார். வசந்த் அண்ட் கோ உருவானது எப்படி? அதன்படி, 1978ம் ஆண்டு வசந்த் அண்ட் கோ என்ற பெயரில் சிறிய அளவில் வீட்டு உபயோகப் பொருட்கள் கடையை ஆரம்பித்தார்.

சாமானிய மக்களும் எளிய முறையில் வாங்கும் வகையில் மடக்கி வைத்துக் கொள்ளும் வயர் சேர், அயர்ன் பாக்ஸ் போன்ற அத்தியாவசியமான பொருட்களை வாங்கி விற்பனை செய்யத் தொடங்கினார்

வசந்தகுமார். விலை குறைவான பொருட்கள் என்றாலும், அதை சாமானிய மக்களும் வாங்கும்படி செய்ய வேண்டும் என்பது தான் வசந்தகுமாரின் இலக்காக இருந்தது. அதன் மூலமே தனது தொழிலை மேலும் விரிவுப் படுத்த முடியும் என்ற தெளிவு அவரிடம் இருந்தது.

அப்போது அவர் கையில் எடுத்த ஆயுதம் தான் தவணை முறையில் வீட்டு உபயோகப் பொருட்கள் விற்பனை. சைக்கிளில் வீடு வீடாகவிற்பனை ஆரம்பத்தில் மிதிவண்டியில் வீடுவீடாக சென்று பொருட்களை விற்று, அவற்றிற்கு தவணை முறையில் பணம் வசூலித்தார்.

வாங்கும் பொருளின் விலையில் குறிப்பிட்ட தொகையைச் செலுத்தினாலே பொருள் கைக்கு வந்து விடும் என்பது வாடிக்கையாளர் களுக்கும் லாபமானதாகவே இருந்தது. இதனால் வசந்தகுமாரின் இந்த திட்டத்திற்கு மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பு கிடைத்தது. வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை அதிகரித்தது. இதனால் கொஞ்சம் கொஞ்சமாக தனது கடையை விரிவுப் படுத்தினார். டிவி, பிரிட்ஜ், வாஷிங்மெஷின் விற்பனை என தனது தொழிலை அடுத்த கட்டத்திற்கு கொண்டு செல்லத் தொடங்கினார் வசந்தகுமார். இம்முறைகுறைந்தவருவாய் உடையோரையும் ஆடம்பரப் பொருட்களை வாங்க வைப்பதே வசந்தகுமாரின் திட்டமாக இருந்தது.

எனவே அதற்கேற்றபடி தள்ளுபடியோடு தவணை முறையில் பொருட்களை விற்பனை செய்ய ஆரம்பித்தார். இதற்கும் மக்களிடையே நல்ல வரவேற்பு கிடைத்தது. வண்ணத் தொலைக்காட்சி அறிமுகமான காலகட்டம் என்பதால் அதனை சந்தையில் எளிதாக விற்பனை செய்து விட முடியும் என நம்பினார். தனித் தனியாக சென்று வாடிக்கையாளர்களைப் பிடிப்பதைவிட, மொத்தமாக தொழிற்சாலைகளுக்குச் சென்று அங்கு தொழிலாளர்களைச் சந்தித்து ஆர்டர் எடுக்கத் தொடங்கினார். அவரது விடாமுயற்சிக்கு கிடைத்த முதல் வெற்றி தான், அசோக் லேலேண்ட் நிறுவனத்தில் 960 வண்ணத் தொலைக்காட்சி பெட்டிகளுக்கான ஆர்டர்.

வசந்தகுமாரின் இந்த வணிக முறை மற்ற வியாபாரிகளை திரும்பிப் பார்க்க வைத்தது. இந்த மிகப் பெரிய ஆர்டர் அப்போது இந்திய அளவில் பெரும் சாதனையாகவே பார்க்கப்பட்டது. உழைப்பு ஒன்றையே முதலீடாகக் கொண்டு, மாற்றிச் சிந்தித்ததன் மூலம் வசந்த் அண்ட் கோ கடையை மக்கள் மத்தியில் மேலும் பிரபலமாக்கினார்.

எந்தவொரு தொழிலாக இருந்தாலும் அதில் முதல் சில லட்சங்களை ஈட்டுவது தான் கஷ்டம். பிறகு அந்தப் பணமே தொழிலை மேலும் மேலும் வளர்ச்சியடையச் செய்யும் என்ற சொல் வழக்கு உண்டு. வசந்தகுமார் விசயத்திலும் அதுதான் நடந்தது. தொழில் பக்தி, செய்யும் தொழில் புதுமைகளைப் புகுத்தியது போன்றவை வசந்தகுமாரை வெற்றியாளராக மாற்றியது.

இன்று தமிழகம் மட்டுமின்றி, பெங்களூரு, கேரளா மற்றும் புதுச்சேரியிலும் சேர்த்து மொத்தம் 64 கிளைகளுடன் மிகப் பெரிய சாம்ராஜ்ஜியமாக வளர்ந்து நிற்கிறது வசந்த் அண்ட் கோ. ரூ.22 முதலீட்டில் ஆரம்பித்த தொழில் இன்று ஆண்டுதோறும் 1000 கோடி விற்று முதலுடன் சிறப்பாக இயங்கி வருகிறது. வசந்த் அண்ட் கோவில் சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்ட பணியாளர்கள் பணி புரிந்து வருகின்றனர்.

இவரின் கடையின் வெற்றிச் சரித்திரத்தைப் புரட்டிப் பார்த்தால் தனி

ஒரு மனிதனாக வசந்தகுமாரின் உழைப்பு மட்டுமே மூலதனமாக இருக்கிறது. வசந்த் அண்ட் கோ மக்களிடம் அதிக வரவேற்பைப் பெற மற்றுமொரு காரணம், பொருட்களை விற்றவுடன், வாடிக்கையாளருடன் தனது உறவைத் துண்டித்து விடாத அணுகுமுறை தான்.

இதற்கென தனி வாடிக்கையாளர் சேவை மையத்தை ஆரம்பித்து வெற்றிகரமாக செயல்படுத்தினார் வசந்தகுமார். திரும்பிய பக்கமெல்லாம் வீட்டு உபயோகப் பொருட்கள் விற்பனையகம் மிகுந்தவை நகரங்கள்.

ஆனால் கிராமங்கள் அப்படியில்லை. எனவே கிராமங்களையே தனது வியாபாரத்திற்கான களமாக்கினார் வசந்தகுமார். கிராமப்புறங்களே வசந்த் அண்ட் கோவின் மிகப்பெரிய மார்க்கெட். அவர்களது விற்பனையில் 60 சதவீதம் ஊரகப் பகுதியில் தான் நடைபெறுகிறது.

வசந்தகுமாருக்கும் தொட்டதெல்லாம் பொன்னாகவில்லை. அவரது தொழில் பாதையிலும் சில சறுக்கல்கள் இருக்கத்தான் செய்தது. மத்த பிரபல நிறுவனங்களிடம் இருந்து வாங்கி விற்ற பொருட்களைத் தவிர, மிக்ஸி, பேன் உள்ளிட்ட சில பொருட்களை சொந்தமாக தயாரித்து விற்பனை செய்யத் தொடங்கினார் வசந்தகுமார்.

ஆனால் பிராண்டுகளை நம்பிய மக்களால் வசந்தகுமாரின் தயாரிப்புகளுக்கு வரவேற்பு கிடைக்கவில்லை. இதனால் தொழிலில் சிறு சறுக்கலைச் சந்தித்தார். ஆனால் உடனடியாக உற்பத்தியை கைவிட்டார். "வாடிக்கையாளர்கள் என்னை உற்பத்தியாளராகப் பார்க்க விரும்பவில்லை. அதனால் அதை கைவிட்டு விட்டேன். இலக்கை நோக்கி செல்கையில் தடைகள் வந்தால் மாற்றுப் பாதையில் போக வேண்டும். அதுவே வெற்றியைக் கொடுக்கும்," என தோல்வியில் இருந்து தான் மீண்ட விதம் பற்றி கூறுகிறார் வசந்தகுமார்.

தொழிலில் வெற்றி பெற்றதைத் தொடர்ந்து, தனது சகோதரர் குமரி அனந்தன் வழியில் அரசியலில் கவனம் செலுத்தத் தொடங்கினார் வசந்தகுமார்.

காங்கிரஸ் கட்சியில் தன்னை இணைத்துக் கொண்டார்.

2006 மற்றும் 2016ம் ஆண்டுகளில் நடந்த சட்டசபைத் தேர்தல்களில் நாங்குநேரி தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். எம்.எல்.ஏ.வாக இருந்த வசந்தகுமாருக்கு எம்.பி.யாக வேண்டும் என்பதே கனவாக இருந்தது.

இங்கு எதுவும் சுலபம் இல்லை. சின்னச் சின்ன விஷயங்களில் இருந்து ஒவ்வொன்றையும் படிப்படியாகத் திட்டமிட வேண்டும். ஏதேனும் தடைகளைச் சந்திக்க நேர்ந்தால், திசையை மாற்றி முன்னேறிச் செல்ல வேண்டும். நீங்கள் முன்னேறிச் செல்ல செல்ல நிறைய அனுபவம் கிடைக்கும். அனுபவங்கள் தடைக்கற்களைச் சுலபமாய்த் தாண்ட உதவி புரியும்" என்ற வசந்தகுமார் யாரும் எதிர்பார்க்காத வண்ணம் கொரோனா எனும் கொடூர அரக்கனின் பிடியில் சிக்கினார்.

நோய் தொற்று சரியான போதும், திடீரென உடல்நிலை மோசமாகியே உயிரிழந்தார் எச். வசந்தகுமார்.

கடின உழைப்பின் மூலம் எதையும் சாதிக்கலாம் என்ற மிகப் பெரிய வாழ்க்கைப் பாடத்தை நமக்கு தந்து விட்டுப் போய் இருக்கிறார் வசந்தகுமார்.

- **மன்னை பாண்டியன்**

பனங்கற்கண்டின் இன்றியமையாத மருத்துவ பயன்கள்

தமிழகத்தில் பனை மரத்தின் வெல்லத்தை இரண்டு வகையாக சொல்வார்கள். முற்றிலும் சுத்தப்படுத்தாத, கெட்டியான கரு நிற வெல்லத்தை "கருப்பட்டி" என்பார்கள். இதை சுத்தப்படுத்தப்பட்ட

படிகங்களாக உருவாகும் சர்க்கரை 'பனங்கற்கண்டு' எனப்படும் இதற்கு மருத்துவ குணங்கள் உள்ளன.

பாலில் பனங்கற்கண்டை சேர்த்து காய்ச்சி குடித்தால் மார்புச்சளி இளகும். முக்கியமாக தொண்டைப்புண், வலி இவை அகலும். பனங்கற்கண்டு, உடல் உஷ்ணம், காங்கை, நீர் சுருக்கு, காய்ச்சலினால் ஏற்படும் வெப்பங்கள் இவற்றுக்கு நல்லது.

பனை மரத்தில் இருந்து கிடைக்கும் பதநீர் பலவிதமான நோய்களை தீர்க்கும் மருந்தாக உள்ளது. பனை நீரிலுள்ள சீனி சத்து உடலுக்கு தேவையான வெப்பத்தை தருகிறது. இதிலிருக்கும் குளுக்கோஸ் மெலிந்து தேய்ந்து வாடிய உடலுடைய குழந்தைகளின் உடலை சீராக்கி நல்ல புஷ்டியை தருகிறது.

கருவுற்ற பெண்களுக்கும் மகப்பேறு பெண்களுக்கும் ஏற்படுகின்ற மலச்சிக்கல், வயிற்றுப் புண் முதலியவைகளை குணப்படுத்துகிறது. இரத்த அழுத்தத்தை சீராக்குகிறது. டைபாய்டு, சுரம், நீர்க்கட்டு முதலிய வியாதிகளை போக்குகின்ற நல்ல மருந்தாகவும் இது செயல்படுகிறது. இதை அருந்துவதால் இருதய நோய் குணமாகும். இருதயம் வலுவடையும்.

இதிலிருக்கும் கால்சியம் பற்களை உறுதிப்படுத்தி, ஈறுகளில் ரத்தக்கசிவு ஏற்படுவதை தடுப்பதோடு பற்களின் பழுப்பு நிறத்தையும் மாற்றுகிறது. இதிலிருக்கும் இரும்புச்சத்து பித்தத்தை நீக்கி சொறி, சிரங்கு உள்பட சகல தோல் வியாதிகளையும் நீக்குவதுடன் கண் நோய், ஜலதோசம், காசநோய் இவைகளையும் நீக்குகிறது.

நாளை நடப்பதை பிறகு பார்த்துக் கொள்ளலாம்! இப்போது மகிழ்ச்சியா இருப்போம்!

எதிர்காலத்தை எதிர்பார்ப்பதில் எந்தத் தவறும் இல்லை. எதிர்பார்ப்பே சில நேரங்களில் மகிழ்ச்சியைத் தருகிறது. வார இறுதிகள், விடுமுறைகள், கொண்டாட்டங்கள், சாதனைகள், வாழ்க்கையின் முக்கிய நிகழ்வுகள் ஆகியவை நம் வாழ்விற்கு உற்சாகத்தையும் இனிமையையும் அளிக்கின்றன. ஆனால் எதிர்பார்ப்பு, நிகழ்காலத்தை ரசிப்பதற்குப் பதிலாக வரப்போகும் நாளைப் பற்றியே அதிகம் சிந்திக்கும் போதுதான் பிரச்சினை தொடங்குகிறது. இன்று நம்மிடம் இருப்பதை அனுபவிக்கத் தவறிவிடுகிறோம்.

மகிழ்ச்சியை ஒத்திவைக்கும் பழக்கம் நமக்கே தெரியாமல் உருவாகிவிடுகிறது. திங்கட்கிழமை வந்தவுடன் வெள்ளிக்கிழமை எப்போது வரும் என்று நினைக்கிறோம். வேலைப்பளு அதிகமான மாதங்களில் அடுத்த விடுமுறைக்காகக் காத்திருக்கிறோம். வாழ்க்கையின் கடினமான காலங்களில், “ஓய்வு பெற்ற பிறகு நிம்மதியாகவும் மகிழ்ச்சியாகவும் வாழலாம்” என்று சொல்லிக்கொள்கிறோம். ஆனால் வாழ்க்கையின் ஒவ்வொரு கட்டத்திலும் தொலைவில் இன்னொரு இலக்கு தோன்றிக்கொண்டே இருக்கிறது. வெள்ளிக்கிழமை வந்ததும் திங்கட்கிழமையைப் பற்றிய கவலை தொடங்குகிறது. விடுமுறை வந்ததும் அது முடிந்துவிடுமே என்ற எண்ணம் வருகிறது. ஓர் இலக்கை அடைந்ததும் இன்னொரு இலக்கு நம்முன் நிற்கிறது.

காலையில் குடிக்கும் ஒரு கோப்பை தேநீரில் வாழ்க்கை இருக்கிறது. நாம் நேசிக்கும் ஒருவருடன் நடத்தும் உரையாடலில் இருக்கிறது. நடைப்பயிற்சியின்போது கேட்கும் இசையில் இருக்கிறது. நண்பர்களுடன் பகிர்ந்துகொள்ளும் சிரிப்பில் இருக்கிறது. ஒரு சிறிய வேலையை முடித்த திருப்தியில் இருக்கிறது. மாலை, வானத்தின் அழகில் இருக்கிறது. அறிமுகமில்லாத ஒருவரிடமிருந்து கிடைக்கும் எதிர்பாராத அன்பில் இருக்கிறது. நம் வீட்டில் அமைதியாக அமர்ந்திருக்கும் அந்தச் சாதாரணமான நிம்மதியிலும் வாழ்க்கை இருக்கிறது. நாம் துரத்திக்கொண்டிருக்கும் பெரிய சாதனைகளுடன் ஒப்பிடும்போது இவை மிகச் சிறிய விஷயங்களாகத் தோன்றலாம். ஆனால் காலம் கடந்தபின் திரும்பிப் பார்க்கும்போது, இப்படிப்பட்ட சாதாரண தருணங்கள்தான் உண்மையில் நம் வாழ்க்கையாக இருந்தன என்பதை உணர்கிறோம்.

நம் எல்லாப் பிரச்சினைகளையும் தீர்த்துவிட்ட பிறகு கிடைக்கும் பரிசுதான் மகிழ்ச்சி என்று சில நேரங்களில் நினைக்கிறோம். ஆனால் மனித வாழ்க்கையில் பிரச்சினைகளே இல்லாத ஒரு நிலை பெரும்பாலும் வருவதில்லை. ஒரு பிரச்சினை முடிந்தால் இன்னொன்று வருகிறது. பொறுப்புகள் மறைவதில்லை; அவற்றின் வடிவங்கள்தான் மாறுகின்றன. வெற்றி புதிய எதிர்பார்ப்புகளை உருவாக்குகிறது. பிள்ளைகள் வளர்கிறார்கள், பணிக்காலம் முடிகிறது, உறவுகள் மாறுகின்றன, உடல் முதுமையை நோக்கிச் செல்கிறது, சூழ்நிலைகளும் தொடர்ந்து மாறிக்கொண்டே இருக்கின்றன. பிரச்சினைகளே இல்லாத வாழ்க்கையில்தான் மகிழ்ச்சி இருக்க முடியும் என்றால், மிகச் சிலருக்கே மகிழ்ச்சியாக வாழ முடியும்.

இளமையில் காலம் அளவற்றதாகத் தோன்றுகிறது. பேச வேண்டிய உரையாடல்களை, செல்ல வேண்டிய பயணங்களை, சந்திக்க வேண்டிய நண்பர்களை, அனுபவிக்க வேண்டிய மகிழ்ச்சிகளை எல்லாம் பிறகு பார்த்துக்கொள்ளலாம் என்று ஒத்திவைக்கிறோம். இன்னொரு வாய்ப்பு எப்போதும் கிடைக்கும் என்று நினைக்கிறோம். ஆனால் காலப்போக்கில் நேரம் என்பது முடிவில்லாத வளம் அல்ல என்பதை உணர்கிறோம். மனிதர்கள் நம்மைவிட்டு விலகுகிறார்கள்; சூழ்நிலைகள் மாறுகின்றன; உடல்நிலை மாறுகிறது; வாய்ப்புகள் மறைந்து போகின்றன. ஒருகாலத்தில் விரைவாகக் கடந்துவிட வேண்டும் என்று நாம் விரும்பிய அந்தச் சாதாரண நாளையே, ஒருநாள் மீண்டும் பெற முடியாதா என்று ஏங்க நேரிடலாம்.

மகிழ்ச்சி நமக்கு முன்னால் எங்கோ காத்திருக்கவில்லை. அது இப்போது நம்மைச் சுற்றி நிகழ்ந்துகொண்டிருக்கும் வாழ்க்கைக்குள்ளேயே மறைந்திருக்கிறது ஜ மனிதர்களில், உரையாடல்களில், நினைவுகளில், சிரிப்பில், இசையில், உழைப்பில், இயற்கையில், நன்றியுணர்வில், மனநிறைவு தரும் அமைதியான தருணங்களில்.

கல்லீரலை சுத்தம் செய்யும் உலர் திராட்சை!

ஒரே வாரத்தில் கல்லீரலை சுத்தம் செய்ய உலர்ந்த திராட்சையை எப்படி சாப்பிடலாம்?

நம் உடலில் இருந்து நச்சுக்களை அகற்றும் பெரிய வேலையை கல்லீரல் செய்துக் கொண்டிருக்கிறது. அதுவே நச்சுக்களால் சூழப்பட்டு செயற்திறன் குறைந்து போனால் என்ன ஆகும்? உடல் நிலை தான் மேலும் மோசமாகும். புகை, ஆல்கஹால், கண்ட உணவுகள், அசுத்தமான சுற்றுப்புற சூழல் போன்றவை நுரையீரல் மற்றும் கல்லீரல் நலன் சீர்கெட முக்கிய காரணிகளாக இருக்கின்றன. உங்கள் கல்லீரல் ஆரோக்கியம் சீர்குலைந்து போனால் ஈரல் அழற்சி, ஈரல் நோய் மற்றும் கொழுப்பு கல்லீரல் போன்றவை உண்டாகும் அபாயம் இருக்கின்றனஞ்

நீங்கள் முதலில் ஒரு பானை, கை நிறைய உலர்ந்த திராட்சை மற்றும் இரண்டு கிளாஸ் தண்ணீர் எடுத்துக் கொள்ள வேண்டும்.

எந்த விகிதத்தில் நீங்கள் உலர்ந்த திராட்சை மற்றும் நீரை கலக்கிறீர்கள் என்பது மிகவும் அவசியம்.

ஆம், அரை கிளாஸ் அளவு உலர்ந்து திராட்சை எடுத்துக் கொண்டால், ஒன்றரை கிளாஸ் அளவு நீர் கொண்டு நீங்கள் கலக்க வேண்டும். 1:3 என்ற விகிதத்தில் தான் கலக்க வேண்டும்.

பானையில் உலர்ந்த திராட்சை மற்றும் நீர் கலந்த பிறகு அதை மூடி வைத்து சில நிமிடங்கள் சூடு செய்ய வேண்டும். சூடாகிய பிறகு அடுப்பில் இருந்து இறக்கி வைத்துவிடுங்கள். ஓர் நாள் இதை உங்க சமையல் அறையிலேயே வைத்துவிடுங்கள்.

அடுத்த நாள் நீங்கள் காலையில் எழுந்ததுமே, அந்த நீரை குடிக்க வேண்டும். இதை ஒரு வாரம் விடாமல் கடைபிடித்து வந்தால், நீங்கள் ஒரு நல்ல மாற்றத்தை உணர முடியும்....

மாற்றத்தை விரும்பாத மனம்!

வாழ்க்கையில பெரிய மாற்றம் வேணும்னு ஆசைப்படுவோம், ஆனா அந்த மாற்றத்துக்காக எதையுமே இழக்க தயாரா இருக்க மாட்டோம்.

நாம உண்மையிலேயே பயப்படுறது மாற்றத்தைப் பார்த்து இல்லை... அந்த மாற்றம் நம்மகிட்ட இருக்கிற சௌகரியத்தை (Comfort Zone) பறிச்சிடுமோன்ற பயம் தான்!

இதன் ஆழமான அர்த்தம் என்ன?

வாழ்க்கையில புதிய உயரங்களைத் தொடணும்னா, பழைய பழக்கவழக்கங்களையும் சோம்பலையும் விட்டுத்தான் ஆகணும். சௌகரியமான சுகத்தையும் விட்டுத்தர மாட்டேன், அதே நேரம் பெரிய வெற்றியும் வேணும்னு நினைச்சா அது நடக்காது.

இருக்கும் இடமே சௌகரியமா தோணும்போது, புது வழியில போக மூளை பயப்படும். ஆனா, அந்த கம்போர்ட் ஜோனை விட்டு வெளியே வராத வரைக்கும் எந்தவொரு உண்மையான வளர்ச்சியும் கிடைக்காது.

புது கதவு திறக்கணும்னா, பழைய கதவை மூடி தான் ஆகணும். சில விருப்பங்கள், பழைய தூக்கம், தேவையில்லாத பொழுதுபோக்குகள் — இதையெல்லாம் இழந்தால் மட்டுமே புதிய வெற்றியையும் அமைதியையும் பெற முடியும்.

கம்போர்ட் ஜோனை உடைக்கவும்: வாழ்க்கையில மாற்றம் வேணும்னா, உங்க சௌகரியமான இடத்துல இருந்து வெளியே வாங்க. இழப்புகளைப் பற்றிக் கவலைப்படாமல், கிடைக்கப் போகும் பெரிய மாற்றத்தை நோக்கி நகருங்கள்.

உங்கள் இலக்கை அடைய இன்றைக்கு எந்தச் சௌகரியத்தை விட்டுக்கொடுக்கப் போகிறீர்கள் என்பதில் தான் உங்கள் எதிர்காலம் இருக்கு!

மொபைல் மீதான மோகம்: பாதிக்கப்படும் குழந்தைகள்!

கடந்த சில நாட்களில் வெளியான மூன்று செய்திகள் நிச்சயம் மனதை உலுக்கியிருக்கும். கேரளாவில் ஐபோன், பைக் வாங்குவதற்கான பணத்தேவையால், 13 வயது சிறுமி தனது நண்பர்களுடன் சேர்ந்து தாத்தாவை மூச்சுத்திணறச் செய்து கொன்றது...

மொபைல் மோகத்தைக் கண்டித்ததால், தெலங்கானாவில் தனியார் பள்ளி பெண் முதல்வரை 10ம் வகுப்பு மாணவர்கள் சேர்ந்து வீட்டுக்குச் சென்று கொன்றுவிட்டு பணத்தைக் கொள்ளையடித்துச் சென்றது...

வாங்கிய ஐபோனுக்கு இஎம்ஐ கட்ட முடியாமல், மகாராஷ்டிராவில் குன்றிலிருந்து விழுந்து 18 வயது இளைஞன் உயிரிழந்த சம்பவத்தைத் தொடர்ந்து, அவரைக் காப்பாற்றச் சென்ற பெற்றோரும் உயிரை மாய்த்துக்கொண்டதாக வெளியான அதிர்ச்சி வீடியோ...

இந்த மூன்று சம்பவங்களும் ஒரே புள்ளியில் இணைகின்றன.

இன்றைய இளம் தலைமுறையின் மனநிலை, ஆசைகள், கட்டுப்பாடுகள் மற்றும் டிஜிட்டல் உலகின் தாக்கம் குறித்து நம்மை தீவிரமாகச் சிந்திக்க வைக்கின்றன. அந்த மூன்று சம்பவங்களைப் பற்றி நினைத்துக்கொண்டிருந்தபோது, சமீபத்தில் இருவர் பேசிக்கொண்டிருந்த உரையாடல் நினைவுக்கு வந்தது. பள்ளிக்குச் செல்லும் குழந்தைகளைப் பற்றித்தான் அவர்கள் பேசிக்கொண்டிருந்தார்கள்.

“பையனை அடித்துவிட்டேன். சொல்றதே கேட்க மாட்டேங்கிறான். எப்போதும் மொபைலே கதியென்று கிடக்கிறான். படிப்பிலும் கவனம் செலுத்த மாட்டேங்கிறான். முன்பெல்லாம் கவிதை, ஓவியம் என்று ஏதாவது நன்றாகச் செய்வான். இப்போதெல்லாம் அந்தப் பக்கமே போவதில்லை. ரீல்ஸ்... ரீல்ஸ்... என்று இருக்கிறான்.

கூடவே தங்கையையும் அந்தப் பழக்கத்துக்கு ஆளாக்கிவிட்டான். இனிமேல் ஒரு நாளைக்கு 15 நிமிடம்தான் மொபைல் பார்க்க வேண்டும். அதுவும் என்னிடம் கேட்டுத்தான் எடுக்க வேண்டும் என்று சொல்லிவிட்டேன்” என்றார்.

எதிரே கேட்டுக்கொண்டிருந்தவர், “எங்கள் வீட்டிலும் இதுதான் பிரச்சினை. என்ன செய்வதென்றே தெரியவில்லை” என்றார்.

தொடர்ந்து அவர் சொன்னது இன்னும் கவனத்தை ஈர்த்தது.

“நாம வேலைக்குப் போறோம். வேலைக்காக மொபைல் பார்க்கிறோம். வீட்டில் மனைவியும் வீட்டு வேலைகளைச் செய்ய வேண்டியிருக்கும். குழந்தைகள் தொந்தரவு செய்யாமல் இருக்க மொபைல் போனை கொடுத்துவிடுகிறோம். கடைசியில் அதுவே பெரிய பிரச்சினையாகிவிடுகிறது.

நாம் சொல்வதையெல்லாம் குழந்தைகள் நம்புவதில்லை. 'ரீல்ஸ்ல வந்திருச்சுப்பா... அதுலேயே சொல்லிட்டாங்க' என்று சொல்கிறார்கள். நாம் சொல்வதைவிட ரீல்ஸில் வரும் தகவல்களைத்தான் நம்புகிறார்கள்" என்றார்.

அந்த உரையாடல் என்னை யோசிக்க வைத்தது. என் வீட்டிலும் இரண்டு குழந்தைகள் இருக்கிறார்கள். அவர்களும் மொபைல் போனை நோக்கி சிறிது சிறிதாக நகரும் தருணங்கள் இருக்கின்றன. சில நேரங்களில் கண்டிப்பாகச் சொல்லி போனைப் பிடுங்கி வைத்து விடுகிறேன்.

நாம் வளர்ந்த காலத்தில் ஒரு செய்தியைப் படித்தோம் என்றால், அது செய்தித்தாளில் வந்திருக்கிறதா என்று பார்த்தோம். பெற்றோர்கள் சொல்வதையும் ஆசிரியர்கள் சொல்வதையும் கேட்டோம். ஆனால், இப்போது ஒரு ரீல்ஸ் வருகிறது. ஒருவர் ஏதோ சொல்கிறார். சில நொடிகளில் அது ஆயிரக்கணக்கான குழந்தைகளின் மனதுக்குள் சென்று விடுகிறது.

அது உண்மையா? யார் சொன்னது? அதற்கான ஆதாரம் என்ன? என்ற கேள்விகளுக்கு இடமே இல்லாமல் போய்விடுகிறது.

பிரச்சினை குழந்தைகள் மொபைல் பயன்படுத்துவது மட்டுமல்ல. அவர்கள் மொபைலில் எதைப் பார்க்கிறார்கள், எதை நம்புகிறார்கள், அது அவர்களின் சிந்தனையை எப்படி மாற்றுகிறது என்பதுதான்.

இன்று விலையுயர்ந்த மொபைல் வேண்டும். நவீன பைக் வேண்டும். ரீல்ஸில் தெரியும் வாழ்க்கையே உண்மையான வாழ்க்கை என்ற எண்ணம் வருகிறது. படிப்பில் நாட்டம் குறைகிறது. சிலருக்கு வேலைக்குச் செல்லவே விருப்பம் இல்லாமல் போகிறது. உடனடி மகிழ்ச்சி, கவனம், அங்கீகாரம் ஆகியவற்றை எதிர்பார்க்கும் மனநிலை உருவாகிறது.

குழந்தைப் பருவத்தில் இப்படிப்பட்ட ஈர்ப்புகள் இருப்பது இயல்பாக இருக்கலாம். ஆனால், அளவுக்கு மீறிய செல்போன் பயன்பாடும், தொடர்ந்து ரீல்ஸ் பார்ப்பதும் ஒரு பழக்கமாக மாறும்போது, அது நேரம், கவனம், தூக்கம், படிப்பு, குடும்ப உறவு என பலவற்றையும் பாதிக்கக்கூடும்.

இது குழந்தைகளுக்கு மட்டுமல்ல. நம்மையும் சேர்த்துத்தான்.

சில நாட்களுக்கு முன்பு பிபிசி தளத்தில் நரம்பியல் மருத்துவர் ஒருவர் அளித்திருந்த விளக்கத்தைப் பார்க்க நேர்ந்தது. நீண்ட நேரம் தலைகுனிந்த நிலையில் மொபைல் பயன்படுத்துவது, குறிப்பாக கேமிங் மற்றும் வீடியோ பார்ப்பதில் தொடர்ந்து ஈடுபடுவது, கழுத்துப் பகுதியில் பாதிப்புகளை ஏற்படுத்தி, ஒரு பக்கம் கை, கால் செயலிழப்பு வரை கொண்டு செல்லக்கூடும் என்று அவர் எச்சரித்திருந்தார். அதிக நேரம் மொபைல் பயன்படுத்துவது தூக்கத்தையும் மனநலத்தையும் பாதிக்கக்கூடும் என்றும் மருத்துவ நிபுணர்கள் தொடர்ந்து எச்சரித்து வருகின்றனர்.

அதனால், குழந்தைகளிடம் மொபைலைப் பறித்துவிடுவது மட்டுமே தீர்வு அல்ல. மொபைலை எப்படி பயன்படுத்த வேண்டும் என்பதையும், அதில் வரும் தகவல்களை எப்படி மதிப்பிட வேண்டும் என்பதையும் கற்றுக்கொடுப்பதுதான் முக்கியம்.

ரீல்ஸில் வந்தால் மட்டும் அது உண்மையாகிவிடுமா? ஒரு தகவலை நம்புவதற்கு முன்பு அதன் ஆதாரத்தைத் தேட வேண்டாமா? இந்தக் கேள்விகளை குழந்தைகளிடம் நாம் உருவாக்க வேண்டும்.

அதற்கு முன், ஒரு நாளைக்கு நாம் எத்தனை மணி நேரம் மொபைலில் இருக்கிறோம் என்பதையும் யோசிக்க வேண்டும். குழந்தைகளிடம் இருந்து மொபைலை விலக்கச் சொல்வதற்கு முன், நம் கைகளில் இருக்கும் மொபைலை நாம் எவ்வளவு கட்டுப்படுத்துகிறோம் என்பதையும் பார்க்க வேண்டும்.

மொபைல் நமக்கான ஒரு கருவியாக இருக்க வேண்டும். அது நம் வாழ்க்கையை இயக்கத் தொடங்கிவிடக் கூடாது. குழந்தைகளை மட்டும் குறை சொல்லாமல், அவர்களுடன் சேர்ந்து நாமும் சில கட்டுப்பாடுகளை உருவாக்கிக்கொண்டு பயணிக்க வேண்டிய நேரம் இது.

உடலுக்கு நன்மை தரும் கேரளா சிவப்பு அரிசி சாதம்!

நாம கேரளாவுக்கு டூர் போயிட்டு அங்கே இருக்குற லோக்கல் ஹோட்டல்கள்ல சாப்பிட உட்கார்ந்தா... அவங்க இலையில வைக்கிற அந்தப் பிரம்மாண்டமான தடித்த சிவப்பு அரிசிச் சாதத்தைப் (Kerala Matta Rice) பார்த்ததும், நம்ம தமிழ்நாட்டு ஆளுங்களுக்கு முதல்ல கொஞ்சம் ஒரு மாதிரிதான் ஃபீல் ஆகும்! "என்னடா இது அரிசி இவ்வளவு பெருசா இருக்கு, வேகாத மாதிரி இருக்கே" அப்படின்னு நாம பலரும் இதைச் சாப்பிடாமல் தவிர்த்திருப்போம். ஆனா, இந்த அரிசிக்குள்ள இருக்குற ஆரோக்கிய ரகசியங்கள் தெரிஞ்சா நீங்க அப்புறம் வெள்ளை அரிசியைத் தொடவே மாட்டீங்க பிரண்ட்ஸ்!

நம்ம ஊர் வெள்ளை அரிசியைச் சாப்பிட்ட உடனே இரத்தத்தில் சர்க்கரை அளவு (Blood Sugar) சட்டென்று எகிறும். ஆனா, இந்த மட்ட அரிசியில் 'கிளைசெமிக் இண்டெக்ஸ்' மிகவும் குறைவு. இதனால் சர்க்கரை நோயாளிக்கும், உடல் எடையைக் குறைக்க (Weight Loss) நினைப்பவர்களுக்கும் இது ஒரு வரப்பிரசாதம்!

இந்தச் சிவப்பு அரிசியின் தவிட்டில்தான் (Outer Bran) உடலுக்குத் தேவையான அசல் இரும்புச்சத்து (மிகூஷீஷீஸ்), துத்தநாகம் (ஞீவீஸீநீ) மற்றும் மெக்னீசியம் அதிக அளவில் நிறைந்துள்ளன. இது ரத்த சோகையை நீக்கி, உடலுக்கு அசாத்திய பலத்தைத் தரும்.

இதில் சாதாரண அரிசியை விட நார்ச்சத்து (Fiber) பல மடங்கு அதிகம். இதனால் மலச்சிக்கல் (Constipation) போன்ற வயிறு சம்பந்தப்பட்ட பிரச்சனைகள் வரவே வராது. கொஞ்சமாகச் சாப்பிட்டாலே வயிறு நிறைந்த திருப்தி கிடைக்கும்!

இந்த அரிசியில் இருக்கும் இயற்கை ஆன்டி ஆக்ஸிடன்ட்டுகள், இரத்தக் குழாய்களில் உள்ள கெட்ட கொழுப்பைக் (Bad Cholesterol) கரைத்து, இதய நோய்கள் வராமல் தடுக்க உதவுகிறது.

கேரள மக்கள் தங்களது பாரம்பரிய நீரியல் வாழ்க்கையிலும் (Backwater Life), படகு ஓட்டுவது போன்ற அதீத உடல் உழைப்பிலும் சோர்வடையாமல் இருக்க இந்த மட்ட அரிசிதான் அவங்களோட 'சீக்ரெட் எனர்ஜி பூஸ்டர்'!

இனிமேல் நீங்க கேரளா டூர் போனா... நம்ம ஊர் வெள்ளை அரிசியைத் தேடி அலைஞ்சு ஏமாறாம, ஆரோக்கியம் நிறைந்த இந்த அசல் 'கேரளா மட்ட அரிசி' சாப்பாட்டை ஒருமுறை மனசாரச் சாப்பிட்டுப் பாருங்க பிரண்ட்ஸ்! உடம்புக்கு அவ்ளோ நல்லது!

அமெரிக்கா கடன் வாங்கினால் இந்தியாவுக்கு என்ன பாதிப்பு!

உலகப் பொருளாதாரத்தின் முடிசூடா மன்னனாகத் தன்னை முன்னிறுத்திக் கொள்ளும் அமெரிக்கா, இன்று வரலாற்றில் முன்னெப்போதும் இல்லாத ஒரு மாபெரும் நிதி நெருக்கடியில் சிக்கியிருக்கிறது. ஆம், அமெரிக்காவின் தேசியக் கடன் முதன்முறையாக 40 ட்ரில்லியன் டாலர்களைத் தாண்டிவிட்டது.

40 ட்ரில்லியன் டாலர் என்றால் எவ்வளவு தெரியுமா? 40 லட்சம் கோடி டாலர்கள்! இதை இந்திய ரூபாயில் மதிப்பிட்டால், கால்குலேட்டரில் பூஜ்ஜியங்கள் பத்தாது. உலகப் பொருளாதாரத்தையே ஆட்டிப்படைக்கும் ஒரு வல்லரசு நாடு, இவ்வளவு பெரிய கடன் மலையின் உச்சியில் உட்கார்ந்திருப்பது சாதாரண விஷயமல்ல. இது உலக நாடுகளுக்கு, குறிப்பாக இந்தியாவிற்கு மிக முக்கியமான எச்சரிக்கை மணி.

கடினமான பொருளாதார வார்த்தைகளைத் தவிர்த்து, ஒரு சாமானிய மனிதனுக்குப் புரியும் வகையில் இந்த நெருக்கடியின் பின்னணியையும், மேற்கத்திய நாடுகளின் இரட்டை வேடத்தையும், இதிலிருந்து இந்தியா கற்றுக்கொள்ள வேண்டிய பாடங்களையும் விரிவாகப் பார்ப்போம்.

இந்த 40 லட்சம் கோடி டாலர் கடன் ஒரே இரவில் உருவானது அல்ல. கடந்த பல தசாப்தங்களாகவே, "வருமானத்தை விட அதிகமாகச் செலவு செய்யும்" பழக்கத்தை அமெரிக்க அரசுகள் வாடிக்கையாகக் கொண்டுள்ளன. குறிப்பாக, கடந்த பத்து ஆண்டுகளில் இந்தக் கடன் சுழல் பல மடங்கு வேகமாக சுழலத் தொடங்கிவிட்டது.

1. கட்டுப்பாடற்ற செலவுகள்: ஆப்கானிஸ்தான், ஈராக் போன்ற வெளிநாடுகளில் பல ஆண்டுகளாக நடத்திய போர்கள், சமீபத்தில் உக்ரைன் மற்றும் இஸ்ரேலுக்கு வழங்கப்படும் ராணுவ நிதியுதவிகள் என ராணுவத்திற்காகத் தண்ணீர் போலப் பணத்தைச் செலவு செய்தார்கள்.

2. பணத்தை அச்சடித்தல்: கோவிட் பெருந்தொற்று காலத்தில், பொருளாதாரத்தைக் காக்கிறோம் என்ற பெயரில் மக்களுக்கும் பெருநிறுவனங்களுக்கும் பல லட்சம் கோடி டாலர்களை இலவசமாக வழங்கினார்கள். இதற்கு எந்த அடிப்படை ஆதாரமும் இல்லாமல், எந்திரங்களில் பணத்தை அச்சடித்து வெளியிட்டார்கள்.

3. வரிச் சலுகைகள்: பெருநிறுவனங்களுக்கும், பெரும் பணக்காரர்களுக்கும் பல ட்ரில்லியன் டாலர் மதிப்பிலான வரிச் சலுகைகளை அள்ளி வழங்கினார்கள். இதனால் அரசாங்கத்தின் வருமானம் கடுமையாகப் பாதிக்கப்பட்டது.

ஒரு கட்டத்தில், வெறும் ஐந்து மாதங்களில் மட்டுமே 1 ட்ரில்லியன் டாலர் (1 லட்சம் கோடி டாலர்) புதிய கடனை வாங்கும் நிலைக்கு அமெரிக்கா தள்ளப்பட்டது. இது எவ்வளவு பெரிய ஆபத்து என்பதை அவர்கள் இப்போதுதான் உணரத் தொடங்கியுள்ளனர்.

நாம் வங்கியில் கடன் வாங்கினால், மாதாமாதம் இஎம்ஐ (ணிவிமி) மற்றும் வட்டி கட்டுவோம் அல்லவா? அதேபோலத்தான் நாடுகளும் தாங்கள் வாங்கிய கடனுக்கு வட்டி கட்ட வேண்டும். இன்று அமெரிக்காவின் நிலைமை என்ன தெரியுமா? அவர்கள் வாங்கிய கடனுக்கான வட்டியாக மட்டுமே ஒரு வருடத்திற்கு சுமார் 1 ட்ரில்லியன் டாலர்களைச் செலுத்துகிறார்கள்.

இதைப் புரிந்துகொள்ள ஒரு சின்ன உதாரணம்: ஒரு குடும்பத்தின் மாத வருமானம் 1 லட்சம் ரூபாய் என்று வைத்துக்கொள்வோம். அதில் 80 ஆயிரம் ரூபாயை கிரெடிட் கார்டு வட்டி கட்டவே செலவழித்தால், அந்தக் குடும்பத்தின் நிலை என்னவாகும்? அதுதான் இன்று அமெரிக்காவின் நிலை.

அமெரிக்கா தனது ஒட்டுமொத்த ராணுவப் படைக்காகச் செய்யும் செலவை விட, கடனுக்குக் கட்டும் வட்டித் தொகை அதிகமாகிவிட்டது. முதியோர்களுக்கான மருத்துவம் மற்றும் ஓய்வூதியத் திட்டங்களுக்குச் செலவிடுவதை விட, வட்டிக்குச் செல்லும் பணமே அதிகம். தினமும் பல ஆயிரம் கோடி ரூபாய்களை வட்டியாக மட்டுமே அந்த நாடு கொட்டிக் கொண்டிருக்கிறது.

இந்த ஒட்டுமொத்தப் பிரச்சினையிலும் நாம் மிக முக்கியமாகக் கவனிக்க வேண்டியது, அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளின் அப்பட்டமான இரட்டை நிலைப்பாட்டைத்தான். (Double Standards).

சர்வதேச நாணய நிதியம் (IMF) மற்றும் உலக வங்கி போன்ற சர்வதேச நிதி அமைப்புகள் யாருடைய கட்டுப்பாட்டில் உள்ளன என்பது நமக்குத் தெரியும். இந்தியா, இலங்கை அல்லது ஆப்பிரிக்க நாடுகள் ஏதேனும் கொஞ்சம் கடனை அதிகமாக வாங்கிவிட்டாலோ, அல்லது ஏழை மக்களின் முன்னேற்றத்திற்காக மானியத் திட்டங்களை அறிவித்தாலோ, இந்த அமைப்புகள் உடனடியாக ஒரு கையில் பிரம்புடன் வந்து நிற்கும்.

"உங்கள் செலவுகளைக் குறைங்கள்! அரசாங்க வேலைகளைக் குறையுங்கள்! மானியங்களை ரத்து செய்யுங்கள்! நிதி ஒழுக்கத்தைக் கடைப்பிடியுங்கள்!" என்று வளரும் நாடுகளுக்கு மணிக்கணக்கில் கிளாஸ் எடுப்பார்கள்.

ஆனால், அதே அறிவுரையை அமெரிக்காவிற்கு யாராவது சொல்ல முடியுமா? அமெரிக்கா பல ட்ரில்லியன் டாலர்களைக் கடனாக வாங்கி, பணத்தை அச்சடித்து, உலகப் பொருளாதாரத்தையே பணவீக்கத்தில் தள்ளியபோது இந்த அமைப்புகள் வாய்மூடி மௌனியாக இருந்தன.

வளரும் நாடுகள் சிறிது கடன் வாங்கினால் கூட, சர்வதேச கடன் தரமதிப்பீட்டு நிறுவனங்கள் (Credit Rating Agencies) அந்த நாடுகளின் தரத்தைக் குறைத்துவிடும். இதனால் அந்த நாடுகளுக்கு வெளிநாட்டு முதலீடுகள் வருவது தடைபடும். ஆனால் அமெரிக்கா தனது சொந்த ஜிடிபியை (GDP) விட 140% அதிகமாகக் கடன் வாங்கியிருந்தாலும், இன்றும் பாதுகாப்பான முதலீட்டுத் தளமாகவே முன்னிறுத்தப்படுகிறது. ஏனென்றால், உலகளாவிய நிதி கட்டமைப்பு என்பது "அமெரிக்க டாலர்" என்ற

ஒற்றை நாணயத்தின் ஆதிக்கத்தில், அவர்களுக்குச் சாதகமாகவே வடிவமைக்கப்பட்டுள்ளது. "எனக்கு ஒரு நியாயம், உனக்கு ஒரு நியாயம்" என்ற இந்த மேற்கத்திய பாசாங்குத்தனம் இன்று உலக அரங்கில் அம்பலமாகியுள்ளது.

"அமெரிக்கா கடன் வாங்கினால் நமக்கென்ன?" என்று நாம் சாதாரணமாக இருந்துவிட முடியாது. அமெரிக்க அரசாங்கம் அதிக அளவில் கடன் வாங்கும்போது, அதற்கான வட்டி விகிதங்களை அவர்கள் உயர்த்துகிறார்கள். இதனால், உலகம் முழுவதும் உள்ள முதலீட்டாளர்கள், வளரும் நாடுகளில் (இந்தியா உட்பட) போட்டிருக்கும் முதலீடுகளை எடுத்துக்கொண்டு போய் அமெரிக்க வங்கிகளில் முதலீடு செய்கிறார்கள்.

இந்திய ரூபாயின் மதிப்பு டாலருக்கு எதிராகச் சரியும். வெளிநாட்டிலிருந்து நாம் வாங்கும் கச்சா எண்ணெய் உள்ளிட்ட பொருட்களின் விலை அதிகரிக்கும் (பணவீக்கம் உயரும்).

உள்நாட்டில் நாம் வாங்கும் வீட்டுக் கடன், வாகனக் கடன்களுக்கான வட்டி விகிதங்களும் உயரும்.

சுருக்கமாகச் சொன்னால், அமெரிக்கா செய்யும் நிதித் தவறுகளுக்கு, இந்தியாவில் உள்ள ஒரு நடுத்தர வர்க்க மனிதனும் தனது சட்டைப் பையிலிருந்து விலை கொடுக்க வேண்டியுள்ளது.

அமெரிக்காவின் இந்த நிதிச் சறுக்கலிலிருந்தும், மேற்கத்திய நாடுகளின் சுயநலத்திலிருந்தும் இந்தியா பல கடினமான உண்மைகளைப் புரிந்துகொள்ள வேண்டும். நமது நாட்டைப் பாதுகாப்பாக வழிநடத்த சில தெளிவான பாடங்களை நாம் கற்க வேண்டும்:

அரசியல் கட்சிகள் தேர்தல் வெற்றிக்காக அள்ளி வீசும் இலவச வாக்குறுதிகளுக்கு ஒரு கடிவாளம் போட

வேண்டும். அரசாங்கத்தின் வருமானத்திற்குள் செலவு செய்யப் பழக வேண்டும். ஒரு நாடு கடன் வாங்குவதில் தவறில்லை, ஆனால் அந்தக் கடன் எதற்காகப் பயன்படுத்தப்படுகிறது என்பதே முக்கியம். வருமானத்தை உருவாக்கித் தராத இலவசங்களுக்காகக் கடன் வாங்குவது நாட்டைக் குட்டிச்சுவராக்கிவிடும். சாலைகள், துறைமுகங்கள், மின் உற்பத்தி நிலையங்கள், டிஜிட்டல் தொழில்நுட்பங்கள் போன்ற உள்கட்டமைப்புகளுக்காக (Capital Expenditure) வாங்கப்படும் கடன் மட்டுமே பிற்காலத்தில் லாபத்தைத் தரும்.

அரசாங்கத்திற்குப் பணம் தேவைப்படும் போதெல்லாம், சாமானிய மக்களின் மீதும், நடுத்தர வர்க்கத்தின் மீதும் வரியை (Income Tax, GST) ஏற்றிக் கொண்டே செல்வது சிறந்த பொருளாதாரக் கொள்கை அல்ல. அது பொருளாதார வளர்ச்சியை முடக்கிவிடும். மாறாக, புதிய தொழில்களை உருவாக்க வேண்டும். பல லட்சம் சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழில்களை (MSME) ஊக்குவிக்க வேண்டும். பலருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும்போது, நாட்டின் ஒட்டுமொத்த உற்பத்தி பெருகும்; இயல்பாகவே அரசாங்கத்தின் வரி வருவாயும், ஜிஎஸ்டி வசூலும் ஆரோக்கியமான முறையில் அதிகரிக்கும்.

அமெரிக்காவைப் போல, நமது வரி வருவாயில் பெரும்பகுதி வெறும் வட்டி கட்டுவதற்கே சென்றுவிடக் கூடாது. கடனை நிர்வகிப்பதில் ரிசர்வ் வங்கியும், மத்திய அரசும் மிகவும் கவனமாகச் செயல்பட வேண்டும். மாநில அரசுகளும் தங்கள் இஷ்டத்திற்கு வரம்பின்றி கடன் வாங்குவதைக் கட்டுப்படுத்த வேண்டும்.

நமக்குத் தேவையான பொருட்களை நாமே உற்பத்தி செய்வது மட்டுமே உலகளாவிய பொருளாதார அதிர்ச்சிகளில் இருந்து நம்மைக் காக்கும் கவசம். வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்வதைக் குறைத்து, "மேக் இன் இந்தியா" (Make in India) மற்றும் தற்சார்பு இந்தியா திட்டங்களை முழு வீச்சில் செயல்படுத்த வேண்டும். உணவு, ராணுவத் தளவாடங்கள், மற்றும் தொழில்நுட்பத்தில் நாம் தன்னிறைவு அடைவது காலத்தின் கட்டாயம்.

இது மிக முக்கியமான ராஜதந்திர நடவடிக்கை. உலக நாடுகள் அனைத்தும் தங்கள் வர்த்தகத்திற்கு அமெரிக்க டாலரையே நம்பியிருப்பதால்தான், அமெரிக்காவால் இப்படி எதேச்சதிகாரமாகச் செயல்பட முடிகிறது. இந்தியா இதை உடைக்க வேண்டும். ரஷ்யா, அரபு நாடுகள் மற்றும் ஆசிய நாடுகளுடன் வர்த்தகம் செய்யும்போது, நேரடியாக இந்திய ரூபாய் அல்லது அந்தந்த நாடுகளின் கரன்சிகளிலேயே வர்த்தகம் செய்யும் முறையை (Rupee Trade) தீவிரப்படுத்த வேண்டும். பிரிக்ஸ் (BRICS) போன்ற அமைப்புகள் மூலமாக டாலருக்கு மாற்றான ஒரு நிதி அமைப்பை உருவாக்குவதில் இந்தியா முக்கியப் பங்கு வகிக்க வேண்டும்.

அமெரிக்கா எவ்வளவு பெரிய கடன் வலையில் சிக்கினாலும், அவர்களிடம் "டாலர்" என்ற உலகளாவிய கரன்சியை அச்சடிக்கும் எந்திரம் இருக்கிறது. அந்த அசுர பலத்தைக் கொண்டு அவர்கள் எப்படியாவது தப்பித்துக்கொள்வார்கள் அல்லது அந்தப் பாரத்தை உலக நாடுகளின் தலையில் கட்டிவிடுவார்கள்.

ஆனால் இந்தியாவிடம் அப்படி ஒரு வசதி இல்லை. நமது பலம் என்பது நமது கடின உழைப்பு, சேமிப்புப் பழக்கம் மற்றும் விவேகமான முதலீடுகள் மட்டுமே. உலக நாடுகளுக்கு நிதி ஒழுக்கம் பற்றிப் பாடம் எடுக்கும் நாடுகள், நிஜத்தில் எப்படிச் செயல்படுகின்றன என்பதை இந்த 40 ட்ரில்லியன் டாலர் கடன் நெருக்கடி முகத்திரையைக் கிழித்துக் காட்டியுள்ளது.

நமது எதிர்காலத் தலைமுறையையும், குழந்தைகளையும் வெளிநாடுகளின் கடனாளிகளாக மாற்றிவிடக் கூடாது என்றால், இன்று நாம் பொறுப்பான பொருளாதாரக் கொள்கைகளைக் கையிலெடுக்க வேண்டும். தற்காலிக அரசியல் லாபங்களுக்காக நாட்டின் எதிர்காலத்தைப் பணயம் வைக்காமல், நீண்ட காலப் பார்வையுடன் உழைத்தால், எந்த ஒரு உலகளாவிய பொருளாதார சுனாமியையும் தாங்கி நிற்கும் வலிமையான ஒரு நாடாக இந்தியா தலைநிமிர்ந்து நிற்கும்!

தகவல்: பொள்ளாச்சி முத்துராஜ்

உண்மையான அங்கீகாரம் பிறர் தருவதல்ல... நமக்குள் பிறப்பது!

அங்கீகாரம் என்பது பெரும்பாலும் பிறரிடமிருந்து நமக்குக் கிடைக்கும் பாராட்டு, முதுகில் தட்டிக் கொடுத்தல், விருது, பதவி உயர்வு, கைதட்டல் அல்லது பொதுவெளியில் கிடைக்கும் பாராட்டுச் சொற்கள் என்று தவறாகப் புரிந்துகொள்ளப்படுகிறது. நாம் செய்ததை மற்றவர்கள் பாராட்டும்போது மகிழ்ச்சி அடைவது இயல்பானதே. ஆனால் உண்மையான, ஆழமான அங்கீகாரம் என்பது மற்றவர்கள் நமக்குத் தருவது அல்ல. ஒருகாலத்தில் நம்மால் முடியாது என்று தோன்றிய ஒன்றைச் சாதித்து முடித்தபோது, நம் மனதின் ஆழத்தில் அமைதியாகப் பிறக்கும் பேரானந்த உணர்வே உண்மையான அங்கீகாரம்.

கடினமான ஒரு பயணத்தைத் திரும்பிப் பார்த்து, நாம் எவ்வளவு தூரம் கடந்து வந்திருக்கிறோம் என்பதை உணர்வதில் ஒரு தனிப்பட்ட மனநிறைவு இருக்கிறது. ஒவ்வொரு அர்த்தமுள்ள சாதனைக்குப் பின்னாலும் ஒரு போராட்டத்தின் கதை இருக்கும். கடக்க முடியாதவை போலத் தோன்றிய தடைகள் இருந்திருக்கலாம்; சூழ்நிலைகள் நமக்கு எதிராக இருந்திருக்கலாம்; சிலர் நம்மை நம்பாமல் இருந்திருக்கலாம்; ஏன், நாமே கூட சில நேரங்களில் இந்தப் பயணத்தைத் தொடர வேண்டுமா என்று சந்தேகப்பட்டிருக்கலாம். இருந்தாலும், நாம் தொடர்ந்து முயன்றோம். சூழ்நிலைக்கேற்ப நம்மை மாற்றிக்கொண்டோம்; கற்றுக்கொண்டோம்; ஏமாற்றங்களைத் தாங்கிக்கொண்டோம்; இலக்கை நோக்கித் தொடர்ந்து நகர்ந்தோம். இறுதியில் அதை அடையும்போது கிடைக்கும் மிகப்பெரிய பரிசு, மற்றவர்களின் கைதட்டல் அல்ல. "நான் இந்தச் சவாலை எதிர்கொண்டேன்; நான் கைவிடவில்லை; இறுதியில் சாதித்துவிட்டேன்" என்று நமக்குள் எழும் அமைதியான பெருமிதமே அந்தப் பரிசு.

நமது அங்கீகாரத்தை மற்றவர்களின் பாராட்டோடு இணைத்துவிட்டால், நமது மகிழ்ச்சிக்கான அதிகாரத்தையே அவர்களிடம் ஒப்படைத்துவிடுகிறோம். அவர்கள் பாராட்டினால் மகிழ்கிறோம்; பாராட்டவில்லை என்றால் ஏமாற்றமடைகிறோம். நம்மைவிடக் குறைவாக உழைத்த ஒருவர் அதிகமாகப் பாராட்டப்படும்போது மனம் வருந்துகிறோம். மெல்ல மெல்ல, நமது செயலின் நோக்கமே மாறத் தொடங்குகிறது. ஒரு செயலைச் செய்ய வேண்டியது சரியானது என்பதற்காகச் செய்வதைவிட, "நாம் செய்வதை மற்றவர்கள் கவனிக்க வேண்டும்" என்பதற்காகச் செய்ய ஆரம்பிக்கிறோம். அப்போது அங்கீகாரம் என்பது நாம் அனுபவிக்கும் ஓர் உணர்வாக இல்லாமல், மற்றவர்களிடமிருந்து எதிர்பார்க்கும் ஒன்றாக மாறிவிடுகிறது.

விருதுகள், பாராட்டுகள், வாழ்த்துகள், பொதுவெளியில் கிடைக்கும் அங்கீகாரம் ஆகியவற்றிற்கும் வாழ்க்கையில் நிச்சயமாக ஒரு இடம் உண்டு. அவை மனிதர்களை ஊக்குவிக்கின்றன; நல்ல செயல்களைத் தொடர்ந்து செய்யத் தூண்டுகின்றன. அவை கிடைக்கும்போது நாம் அவற்றை நிராகரிக்க வேண்டியதில்லை. ஆனால், அவை நமது பயணத்தில் கிடைக்கும் கூடுதல் மகிழ்ச்சியாக மட்டுமே இருக்க வேண்டும்; அந்தப் பயணத்தை மேற்கொள்வதற்கான காரணமாக மாறிவிடக்கூடாது. வெளிப்புறப் பாராட்டுதான் நமது மனநிறைவின் முக்கிய ஆதாரமாக மாறும் தருணத்தில், நாம் மற்றவர்களின் கருத்துகளுக்குக் கைதிகளாகிவிடுகிறோம்.

மிக உயர்ந்த அங்கீகாரம் என்பது மிகவும் தனிப்பட்ட ஓர் அனுபவம். கடினமான ஒரு பணிக்காக நம்மால் முடிந்த அனைத்தையும் செய்துவிட்டு நிம்மதியாக உறங்குவதில் அது இருக்கிறது. ஒருகாலத்தில் நமது சக்திக்கு அப்பாற்பட்டவை என்று தோன்றிய சவால்களை வென்ற மனநிறைவில் அது இருக்கிறது. சூழ்நிலைகள் கடினமாக இருந்தபோதும் சரணடையாமல் நின்றதால் கிடைக்கும் தன்னம்பிக்கையில் அது இருக்கிறது.

எல்லாவற்றிற்கும் மேலாக, "நான் இருந்ததால் ஒருவருடைய சுமை கொஞ்சம் குறைந்தது; ஒருவருடைய நெருக்கடிக்குத் தீர்வு கிடைத்தது; ஒருவருடைய தன்னம்பிக்கை மீண்டும் பிறந்தது; ஒருவருடைய வாழ்க்கை கொஞ்சமாவது மேம்பட்டது" என்று நினைக்கும்போது நமக்குள் பிறக்கும் அந்த அமைதியான புன்னகையில்தான் உண்மையான அங்கீகாரம் இருக்கிறது.



மருத்துவ அகராதி தந்த மாமேதை!

இந்திய மருத்துவ முறைகளாக ஆயுர்வேதா, யோகா மற்றும் இயற்கை மருத்துவம், யுனானி, சித்தா, ஓமியோபதி உள்ளன. ஆயுஷ் மருத்துவத்துக்குச் சிறந்த முறையில் பங்காற்றிய 12 பேரின் படம் பொறித்த அஞ்சல் தலைகளை முதல் முறையாக 2019 ஆகஸ்டு 30 டெல்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பிரதமர் நரேந்திர மோடி மத்திய அரசு சார்பாக வெளியிட்டார். முன்னதாக, 12 பேரையும் கவுரவிக்கும் விதமாக ஆயுஷ் காலண்டர் வெளியிடப்பட்டது.

இந்த 12 பேரில் தமிழகத்தில் இருந்து தேர்வு செய்யப்பட்ட ஒரே நபர் டி.வி.சாம்பசிவம் பிள்ளை. இவர் தொகுத்து எழுதிய 'கலைக் களஞ்சியம் அகராதி' சித்த மருத்துவத்துக்குப் பெரும் பங்களிப்பைத் தந்துள்ளது.

5 தொகுதிகளைக் கொண்ட இந்த அகராதி, 87 ஆயிரம் வார்த்தைகளுடன் 7,099 பக்கங்களைக் கொண்டது. 'மருத்துவ அகராதி தந்த மாமேதை' என்று சித்த மருத்துவ அறிஞர்களால் அவர் அழைக்கப்படுகிறார். இவரது பங்களிப்பை அங்கீகரித்துள்ள ஆயுஷ் அமைச்சகம், ஆயுஷ் காலண்டரில் இவருக்காக ஒரு பக்கத்தை ஒதுக்கிக் கவுரவித்துள்ளது.

தஞ்சாவூர் மாவட்டம் பாபநாசம் வட்டம் கம்மந்தங்குடியைச் சேர்ந்த வில்லையா மன்னையார் மனோன்மணி அம்மாள் இருவருக்கும் டி.வி.சாம்பசிவம் பிள்ளை பெங்களூரில் 1880ஆம் ஆண்டு செப்டம்பர் 19ஆம் தேதி பிறந்தார். பெங்களூரிலேயே பள்ளி இறுதி வகுப்பு வரை படித்தார். அதற்கு மேல் படிக்கவில்லை.

1899இல் பெங்களூரில் பிளேக் நோய் பரவலால் குடும்பம் அங்கிருந்து வெளியேறி தஞ்சையை அடுத்த அம்மாபேட்டைக்குக் குடி வந்தது. சென்னை காவல் ஆணையர் அலுவலகத்தில் ஊழியராகப் பணியாற்றிக் கொண்டிருந்த போது,1903இல் துரைக்கண்ணு என்ற பெண்ணை மணமுடித்தார். இவருக்கு அப்போது பிறந்த 5 குழந்தைகளும் இறந்துவிட்டன. இதைத் தொடர்ந்து இவரது மனைவியும் காலரா நோயால் பாதிக்கப்பட்டு இறந்து போனார்.

1907இல் காவல்துறையில் துணை ஆய்வாளராக பணியில் சேர்ந்தார்.1916 அம்மணி என்ற பெண்ணை இரண்டாவது திருமணம் செய்து கொண்டார். குழந்தை பிறப்பின்போது அவரும் இறக்க நேரிட்டது. இதனால், கடுமையான மனஅழுத்தத்தில் இருந்த நேரத்தில் சித்த மருத்துவத்தில் கவனத்தை செலுத்தத் தொடங்கினார்.

பல்வேறு கஷ்டங்களுக்கு இடையே வேலை பார்த்து

சம்பாதித்த பணத்தை வைத்து சித்த மருத்துவத்துக்கு 5 தொகுதிகளைக் கொண்ட அகராதிகளை எழுதினார். தனது சொத்துக்கள் அனைத்தையும் விற்று அகராதியின் முதல் 2 தொகுதிகளை வெளியிட் டார்.

மூன்றாவது தொகுதி அகராதியை தமிழக அரசு வெளியிட்டது. 1953ஆம் ஆண்டு நவம்பர் 12ஆம் தேதி தனது 73ஆவது வயதில் சாம்பசிவம் பிள்ளை மறைந்தார்.

அவரது மறைவுக்கு பின்னர் 4 மற்றும் 5ஆவது தொகுதி அகராதிகளை ஜி.டி.நாயுடு குடும்பத்தினர் வெளியிட்டனர். சித்த மருத்துவம் படிப்பவர்கள் யாராக இருந்தாலும் இவரது அகராதியைப் படிக்காமல் இருக்க மாட்டார்கள். அந்த அளவுக்கு சித்த மருத்துவத்துக்குப் பெரும் பங்களிப்பை ஆற்றியுள்ளார் டி.வி.சாம்பசிவம் பிள்ளை.



சாம்பசிவம் பிள்ளை இவ்வகராதி வெளியீட்டுக்காகத் தம் பூர்வீகச் சொத்தான இரண்டு வேலி நிலத்தை விற்றதோடு, ஓய்வூதியத்தையும் முன்னரே பெற்று 12,000 ரூபாய்க்கு மேல் செலவு செய்திருக்கிறார். முதல் இரண்டு தொகுதிகள் அடுத்தடுத்து 1938ஆம் ஆண்டளவில் வெளிவந்ததாகத் தெரிகிறது. இவைகளின் காப்புரிமைக்காக பிரிட்டிஷ் கவுன்சிலும் ஜெர்மன் தூதரகமும் பெருந்தொகை கொடுப்பதாகக் கூறி போட்டியிட்டன.

ஆனால் சாம்பசிவம் பிள்ளை அயல் நாட்டினருக்குக் கொடுக்கமாட்டேன் என்று விடாப்பிடியாக சொல்லிவிட்டார்.

1949இல் சென்னை மாநில அரசு அவருக்கு ஐயாயிரம் ரூபாய் உதவித்தொகை அளித்ததோடு, சென்னை சிந்தாதிரிப்பேட்டை அருணாசல நாயக்கர் தெருவில் ஒரு வீட்டையும் கொடுத்திருக்கிறது. இந்த உதவியளித்தலுக்குப் பின்னே இருந்தவர்கள் யாரெனத் தெரியவில்லை. ஆனால் இந்த அரசு உதவியே அகராதிக்கு ஆபத்தாக அமைந்துவிட்டது.

மூன்றாம் தொகுதி பாதி அச்சான நிலையில், 1953இல் டி.வி. சாம்பசிவம் பிள்ளை காலமானார். வாரிசில்லாத நிலையில், சென்னை தாசில்தார் அவர் இருந்த வீட்டைப் பூட்டிவிட்டதோடு, வீட்டிலிருந்த பொருட்கள் அனைத்தையும் எடுத்துச்சென்று சென்னை ஆட்சியர் அலுவலகத்தில் வைத்துப் பூட்டிவிட்டார்.

இது நடந்து ஒரு பத்தாண்டுகளுக்குப் பிறகு இதைக் கேள்விப்பட்ட சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழக நிறுவனர்களில் ஒருவரும் மறைமலையடிகள் நூல்நிலையத்தைத் தோற்றுவித்தவருமான வ. சுப்பையா பிள்ளை 1966இல் முயற்சி எடுத்து, சென்னை ஆட்சியர் அலுவலகத்தில் தேடியிருக்கிறார்.

அங்கு ஒரு கள்ளிப்பெட்டி நிறைய மருத்துவ நூல்களும் நிகண்டுகளும் செல்லரிப்பான நிலையில் இருந்திருக்கின்றன. அதன் பக்கத்தில் ஒரு அடுக்கிலே அகராதியின் கையெழுத்துப் படிகளும் அச்சிட்ட படிவங்களும் இருந்திருக்கின்றன. மூன்றாம் பாகத்தின் 2174 பக்க எண்ணோடு முடியும் படிவத்தையும் அவர் கண்ணுற்றிருக்கிறார். அங்கே இருந்த ஒரு பள்ளியிறுதிச் சான்றிதழிலிருந்து சாம்பசிவம் பிள்ளை தம்பி டி.வி. அண்ணாமலைப் பிள்ளையின் முகவரியைப் பெற்று, அவர் வழியாகச் சாம்பசிவம் பிள்ளை பணி அடையாள அட்டையிலிருந்த படத்தை வ. சுப்பையா பிள்ளை பெற்றிருக்கிறார். இன்று கிடைக்கப்பெறும் சாம்பசிவம் பிள்ளையின் ஒரே படம் இதுவேயாகும். வ. சுப்பையா பிள்ளையின் இடையீட்டுக்குப் பிறகு, அகராதியின் கையெழுத்துப்படிகளும் அரைகுறையாக இருந்த அச்சுப்படிகளும் சென்னை அண்ணா நகர் சித்த மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டதென அவர் 1972இல் குறித்துள்ளார். அங்கு அரசின் மானிய உதவியுடன் மூன்றாம் பகுதியின் பிற்பகுதி அச்சிடப் பெற்று பழைய படிவங்களோடு சேர்த்துக் கட்டப்பட்டு, வெளியிடப்பெற்றிருக்கிறது. இதில் அதன் இயக்குநர் டாக்டர் வேணு கோபால் முன்னின்றதாகத் தெரிகிறது. இவ்வெளியீடு 19721977க்கு இடைப்பட்ட காலத்தில் நிகழ்ந்திருக்கலாம். இப்பொழுது பார்க்கக் கிடைக்கும் முதல் மூன்று தொகுதிகளின் முதற்பதிப்புகளும் இச்சமயத்தில் கட்டப்பட்டதாகவே தெரிகின்றது!

– மன்னை பாண்டியன்

"நம்பவும் முடியல நம்பாம இருக்க முடியல. ஆனால் நடந்ததை பார்த்தா இதுவும் நடக்கும் போல" என்று புதிர் போட்டுக் கொண்டே உட்கார்ந்தார் கபாலிகான்.

ஏதோ குழப்பத்தில் இருக்கிறாரோ என்று எண்ணி லெமன் டீ தேனில் கலந்து கொடுத்துவிட்டு அவரே விஷயத்தை சொல்லட்டும் என்று அமர்ந்திருந்தோம்.

"புரியல இல்ல"

என்ன சொல்வதென்று யோசிக்கும் போது...

புரியாது. ஆனா நான் சொல்றேன் கேளுங்க.

சொல்லுங்க...

பிரதமர் பதவியை நோக்கி விஜய் நகர்த்தப்படுகிறார் தெரியுங்களா?

என்னது?

ஆச்சரியப்படாதீங்க. இது நடந்தாலும் நடக்கும். ஆச்சர்யப்படாதீங்க.

எப்படிங்க தமிழ்நாட்டுல இருந்துகிட்டு...?

நாம் கேள்வியை முடிக்கும் முன்...

ஏன் முடியாது?

அவர் Pan இந்தியா திரைப்படம் வந்திருக்கு இல்ல.

அது சினிமா இது அரசியல்?

அவரைப் பொறுத்தவரை அவர் நினைப்பது நடப்பதற்கு எல்லா விதமான ஏற்பாடுகளும் தயாராக இருப்பதாக சொல்கிறார்கள்.

தமிழ்நாட்டில் முழுமையா...

முதல்வராக தொடராமலே எப்படிங்க என்று கேட்கிறீர்கள். இங்கு வேற ஆளை போடுவார் என்கிறார்கள் அதற்கு போட்டியும் நடந்து கொண்டிருக்கிறது.

போட்டியா?

ஆமாம் புஸ்ஸி ஆனந்த்-க்கும் ஆதவுக்கும் போட்டி என்று பேப்பரில் செய்து வந்திருக்கிறது நீங்கள் படிக்கவில்லையா?

இது எப்ப?

காங்கிரஸ் சட்டசபை தலைவர் ராஜேஷ் குமார் விஜய் பிரதமர் வேட்பாளர் என்றால் நாங்கள் எங்கள் ஆதரவை வாபஸ் பெறுவோம் என்று சொன்னார்.



அப்படியா?

தென்னிந்திய முதல்வர்கள் மாநாட்டுக்கு பிறகு குறிப்பாக அமித் ஷாவை சந்தித்த பிறகு விஜய் பிரதமர் ஆவதற்கான எல்லா நடவடிக்கையும் தொடங்கப்பட்டு விட்டது.

தமிழக முதல்வர் விஜய்யை பிரதமராக்க வேண்டும் என்ற தவெகவினரின் முழக்கம் மற்றும் கருத்துகள் தேசிய அளவில் விவாதத்தை ஏற்படுத்தியுள்ளன.

தவெகவின் நிலைப்பாடு மற்றும் கருத்துகள் தமிழக வெற்றிக் கழகத்தின் (தவெக) சில தலைவர்களும் நிர்வாகிகளும் விஜய் வருங்காலப் பிரதமராக வருவது காலத்தின் கட்டாயம் என்று பேசி வருகின்றனர்.

இந்தியாவின் இளம் வாக்காளர்கள் மற்றும் Genz தலைமுறையினர் விஜயை ஒரு வலுவான தலைவராக எதிர்பார்ப்பதாக தவெக தரப்பில் கூறப்படுகிறது.

தேசிய ஊடகங்களின் கருத்துக்கணிப்புகளில் விஜய் மூன்றாவது இடத்தில் இருப்பது

அவரது அரசியல் செல்வாக்கை அதிகரித்துள்ளதாக ஆதரவாளர்கள் கருதுகின்றனர்.

காங்கிரஸ் மற்றும் பிற கட்சிகளின் எதிர்ப்பு தேசிய அளவில் இந்தியா கூட்டணியின் பிரதமர் வேட்பாளர் ராகுல் காந்தி மட்டுமே இருக்க முடியும் என்று காங்கிரஸ் கட்சி திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளது.

தவெகவினர் விஜய்யை பிரதமராகப் பார்ப்பது கற்பனையானது என்றும், மாநில நிர்வாகத்தில் கவனம் செலுத்த வேண்டும் என்றும் காங்கிரஸ் தலைவர்கள் விமர்சித்துள்ளனர்.

மதிமுக பொதுச்செயலாளர் வைகோ, விஜய்க்கு பிரதமராகும் ஆசை கனவில் கூட இருக்காது என்று கருத்து தெரிவித்துள்ளார்.

வைகோ சொன்னாரா?

ஆமாம். அவர் இருக்காது என்று சொன்னால், இருக்கும் என்று அர்த்தம்.

கருத்துக்கணிப்பு கூட நடத்தியாச்சு?

அப்படியா?

ஆமாம்.

இந்தியா டுடே சி வோட்டர் இணைந்து நடத்திய சமீபத்திய 'மூட் ஆஃப் தி நேஷன்' கருத்துக்கணிப்பில், 2029 மக்களவைத் தேர்தலில் நாட்டின் அடுத்த பிரதமராக யார் வர வேண்டும் என்ற கேள்விக்கு, தவெக தலைவர் விஜய்க்கு 9.2% வாக்குகள் கிடைத்துள்ளன.

இதில் பிரதமர் நரேந்திர மோடி (48.7%), காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி (27.1%) ஆகியோருக்கு அடுத்தபடியாக நாட்டின் 3வது பிரதமர் வேட்பாளராக விஜய் உருவெடுத்துள்ளார்.

9.2 சதவீதம் தானே?

தமிழ்நாட்டில் அவருக்கு 10 சதவீதம் தான் இருக்கும் என்று சொன்னோம். 35 சதவீதமாக மாறவில்லையா இதுவும் அப்படி மாறும் என்கிறார்கள் த.வெ.க.வினர். அது போக ஆஸ்தான ஜோதிடர் மீது வைத்திருக்கும் நம்பிக்கையும் ஒரு காரணம்.

அவர் என்ன சொல்றார்?

தமிழக முதல்வர் விஜய் 2029ம் ஆண்டில் இந்தியாவின் பிரதமர் ஆவார் அல்லது அந்தத் தேர்தலைத் தீர்மானிக்கும் சக்தியாக விஜய் இருப்பார் என்று ரத்தன் பண்டிட் கணித்துள்ளார்.

விஜயின் ஜாதகம் பிரதமர் நரேந்திர மோடியின் ஜாதகத்துடன் ஒத்துப்போவதாகவும், மோடி தனது 51 வது வயதில் குஜராத் முதலமைச்சரானதைப் போல விஜய் தனது 51வது வயதில் தமிழக முதலமைச்சராகப் பதவியேற்று உள்ளதாகவும் அவர் குறிப்பிடுகிறார்.

2029 நாடாளுமன்றத் தேர்தலில் தமிழகம் மற்றும் தெற்கிலிருந்து சுமார் 60 எம்.பி இடங்களை இலக்காகக் கொண்டு தவெக (TVK) செயல்படும் என்றும் கணிக்கப்பட்டுள்ளது.

இப்போதே தொலைக்காட்சி விவாதங்களில் இதுகுறித்து பேசப்பட்டு வருகிறது. த.வெ.க. சார்பில் பேசுபவர்கள் இதை உறுதிப்படுத்துகிறார்கள்.

ஏற்கனவே ஜெயலலிதா குஜராத் மோடியா தமிழ்நாட்டில் லேடியா என்று கேட்டது இப்போது நினைவுக்கு வருகிறது பார்ப்போம் அடுத்த மாதம் என்ன வருகிறது என்று.. சொல்லிக்கொண்டே வெளியேறினார் கபாலிகான்.

நேபாள வெள்ளத்தில் 1643 மாணவர்களை காப்பாற்றிய பள்ளி முதல்வர்!



நேபாள வெள்ளத்தில் 1643 மாணவர்களை காப்பாற்றிய பள்ளி முதல்வர்!

நேபாளத்தில் ஒரு பள்ளி முதல்வர், தனது பள்ளி முற்றிலும் அழிக்கப்படுவதற்கு சில நிமிடங்களுக்கு முன்பு 1,643 குழந்தைகளின் உயிரைக் காப்பாற்றினார்.

அவரது பெயர் ராஜேந்திர தாவாடி. ஆகஸ்ட் 26ஆம் தேதி காலை, திரிஷூலி பள்ளத்தாக்கை நோக்கி பேரழிவை ஏற்படுத்தக்கூடிய வெள்ளம் வேகமாக வந்து கொண்டிருப்பதாக அவருக்கு எச்சரிக்கை கிடைத்தது.

முதலில், பள்ளி ஆற்றின் மட்டத்திலிருந்து போதுமான உயரத்தில் இருப்பதால் பாதுகாப்பாக இருக்கும் என்று தோன்றியது. ஆனால் அடுத்த எச்சரிக்கை வந்தது.

தண்ணீர் வேகமாக உயர்ந்து கொண்டிருந்தது. ராஜேந்திரர் உடனடியாக பள்ளி மணியை அடித்து, அனைவரையும் வெளியேறுமாறு உத்தரவிட்டார்.

அப்போது பள்ளிக்குள் சுமார் 900 குழந்தைகள் ஏற்கனவே இருந்தனர்.

மேலும் நூற்றுக்கணக்கான மாணவர்கள் பேருந்துகளிலும் நடந்தும் பள்ளியை நோக்கி வந்து கொண்டிருந்தனர்.

அவர் பேருந்து ஓட்டுநர்களைத் தொடர்புகொண்டு, உடனடியாக திரும்பிச் செல்லுமாறு கூறினார்.

பின்னர் மாணவர்களும் ஆசிரியர்கள் மற்றும் ஊழியர்களும் பாதுகாப்பான உயரமான பகுதிகளை நோக்கி அவசரமாகச் சென்றனர்.

சில நிமிடங்களிலேயே வெள்ளம் அந்தப் பகுதியை மிகப்பெரிய வேகத்தில் தாக்கியது. பள்ளிக் கட்டிடம் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டு கடுமையாக சேதமடைந்தது.

ஆனால் 1,643 மாணவர்களும் உயிருடன் தப்பினர்.

ஒரு எச்சரிக்கை. ஒரு உடனடி முடிவு. 1,643 குழந்தைகள் பாதுகாப்பாக வீட்டிற்குத் திரும்பும் வாய்ப்பைப் பெற்றனர்.

மாவட்ட நீதிபதியின் மனிதநேயம்!

தெலுங்கானா மாநிலம் புவன் பள்ளி மாவட்டத்தில் மாவட்ட நீதிபதி அப்துல் அசீம் அவர்களின் மனித நேயம் குறித்த செய்தி தற்போது வலைதளங்களில் வலம் வருகிறது.

ஒரு மூதாட்டி நடக்க முடியாத தள்ளாத வயது. அவருக்கு இரண்டு வருடங்களாக ஓய்வூதியம் கிடைக்கவில்லை ... வாழ்வாதாரம் கேள்விக்குறியான நிலையில் மாவட்ட நீதிமன்றத்தை நாடி புகாரளிக்க முடிவு செய்து மாவட்ட நீதிமன்ற அலுவலகம் வருகிறார். ஏற்கனவே நீண்ட தூரம் நடந்து வந்த அவரால் படிகளில் ஏற முடியவில்லை. நடக்க இயலாமல் படிகளில் அமர்கிறார். டவாலி மூலமாக மாவட்ட நீதிபதிக்கு (DM) தகவல் செல்கிறது.

மாவட்ட நீதிபதி மாடியிலிருந்து இறங்கி வருகிறார்.மூதாட்டி அமர்ந்திருந்த படிகளில் மூதாட்டி அருகே அமர்கிறார்.

அந்த இடம், நீதிமன்றமாக மாறுகிறது. விசாரணை பரிவுடன் ஆரம்பிக்கிறது... மூதாட்டியும் தனக்கு ஓய்வூதியம் கிடைக்கவேண்டி தன்னிடமிருந்த ஆவணங்களை மாவட்ட நீதிபதியிடம் ஒப்படைக்கிறார். அந்த இடத்திலேயே அந்த ஆவணங்களைப் பரிசீலனை செய்து அந்த மூதாட்டிக்கு ஓய்வூதியம் கிடைக்க தீர்ப்பளிக்கிறார்.

மித்ரா டைம்ஸ்

சந்தா தொகை அனுப்பி விட்டீர்களா!

சந்தா செலுத்துபவர்களுக்கு சிறப்பு சலுகையாக...

மித்ரா டைம்ஸ் இதழுடன்...

பெண் உலகம், மித்ரா பிக்சர்ஸ் நியூஸ்

ஆகிய இரண்டு இணைப்பு இதழ்கள் அனுப்பி வைக்கப்படும்.

சந்தா செலுத்துபவர்களுக்கு மட்டுமே இந்த சிறப்பு சலுகை

3 ஆண்டு சந்தா : 900/-

6 ஆண்டு : சந்தா: 1500/-

தொடர்புக்கு: சந்தா மேலாளர் 9003107102

நினைப்பது நடக்காவிட்டால் நடப்பதை நினைப்போம்!

நாட்டின் பொருளாதார நிலை மிகவும் மோசமாக இருப்பதாகக் கூறப்படுகிறது. குடியிருப்புப் பகுதிகளுக்குச் சென்றால், வாகனம் நிறுத்த இடமே கிடைப்பதில்லை. கார் விற்பனையகத்திற்குச் சென்றால், புதிய மாடல்களுக்கு நீண்ட காத்திருப்புப் பட்டியல் உள்ளது. வாடிக்கையாளர்கள் புதிய வாகனத்தைப் பெற ஆறு மாதங்கள் அல்லது அதற்கும் மேலாகக் காத்திருக்க வேண்டியுள்ளது. உணவகத்திற்குச் சென்றால், காலியான மேஜை கிடைப்பதில்லை. பல உணவகங்களில் மக்கள் வரிசையில் காத்திருக்கிறார்கள். ஷாப்பிங் மால்களில் கூட்டம் அலைமோதுவதால், வாகனங்களை நிறுத்த இடமே கிடைப்பதில்லை.

பல மொபைல் போன் மாடல்கள் கையிருப்பில் இல்லை; புதிய ஐபோன்கள் (iPhones) அறிமுகமான உடனேயே விற்றுத் தீர்ந்துவிடுகின்றன. ஆன்லைன் ஷாப்பிங் காலம் இது என்றாலும், வேலை நாட்களிலும் சந்தைகள் மக்கள் கூட்டத்தால் நிரம்பி வழிகின்றன. போக்குவரத்து நெரிசல் அன்றாட நிகழ்வாகிவிட்டது. அதே சமயம் ஆன்லைன் ஷாப்பிங்கும் அமோகமாக நடைபெறுகிறது. இருப்பினும், பெட்ரோல் விலை உயர்வு தங்களை நிதி ரீதியாக நிலைகுலைய வைத்துவிட்டதாக மக்கள் கூறுகிறார்கள். ஆனால் அதே மக்கள், காரின் இன்ஜினை ஓடவிட்டபடியே உள்ளே அமர்ந்து அரட்டை அடிப்பதைக் காண முடிகிறது. வாகன உதவி இல்லாமல் அவர்களால் 50–100 மீட்டர் தூரம் கூட நடக்க முடிவதில்லை. என் வீட்டில் தேவையற்ற விளக்குகள், மின்விசிறிகள் மற்றும் தொலைக்காட்சிகள் ஓடிக்கொண்டிருந்தால் எனக்கு அது ஒரு பொருட்டாகத் தெரிவதில்லை. ஆனால் மின்சாரக் கட்டணம் உயர்ந்தவுடன், என் மனசாட்சி உறுத்தத் தொடங்குகிறது.

என் குழந்தைகள் போர்வையைப் போர்த்திக்கொண்டு ஏர் கண்டிஷனரை (AC) 16குசில் வைத்துத் தூங்கும்போது நான் எதுவும் சொல்வதில்லை. ஆனால் மின்சாரக் கட்டணம் உயர்ந்தவுடன், எனக்குக் கோபம் பொத்துக்கொண்டு வருகிறது.

வாட்டர் ஹீட்டர் நாள் முழுவதும் ஆன் (on) செய்யப்பட்டிருந்தாலும் அது ஒரு பிரச்சனையாகத் தெரிவதில்லை. ஆனால் மின்சாரக் கட்டணங்கள் உயரும்போது, அந்தச் செலவு எனக்கு வலிக்கிறது.

என் மனைவியோ அல்லது வீட்டு வேலை செய்பவரோ சமையல் எரிவாயுவை வீணடித்தால் நான் அமைதியாக இருந்து விடுகிறேன். ஆனால் எரிவாயு விலை உயர்ந்தவுடன், என் நாக்கு கத்தரிக்கோல் போலக் கூர்மையாகப் பேசத் தொடங்குகிறது.

சிவப்பு விளக்கு (red light) எரியும்போது கார், பைக் அல்லது ஸ்கூட்டரின் இன்ஜினை அணைக்க எனக்கு விருப்பமில்லை. மிக அருகில் உள்ள கடைக்கு பால் வாங்கச் செல்லக்கூட நான் ஸ்கூட்டர் அல்லது பைக்கையே பயன்படுத்துகிறேன். வார இறுதி நாட்களில், எந்தத் தேவையும் இல்லாமலே சாதாரணமாக 10ருே20 கிலோமீட்டர் தூரம் வாகனம் ஓட்டுகிறேன். ஆனால் பெட்ரோல் விலை ஒரு ரூபாய் உயர்ந்தால் கூட எனக்கு எரிச்சல் வருகிறது.

எனது சம்பளத்தை உயர்த்தாததற்காக நான் அரசாங்கத்தைக் குறை கூறுகிறேன்; ஆனால் வீட்டு வேலை செய்பவரின் கூலியை உயர்த்தவோ, காய்கறி விற்பவருக்குப் பணம் கொடுக்கவோ அல்லது ஏதேனும் கட்டணத்தைச் செலுத்தவோ வேண்டிய நேரம் வரும்போது, என் இரத்த அழுத்தம் எகிறி விடுகிறது. என் குழந்தைகள் என் பேச்சைக் கேட்காவிட்டால் பரவாயில்லை. ஆனால் பிரதமரோ அல்லது அரசாங்கமோ என் பேச்சைக் கேட்காவிட்டால், நான் விதவிதமான வசவுகளைப் பொழியத் தொடங்கிவிடுகிறேன். ஏனென்றால், நான் ஒரு சுதந்திரமான நாட்டின் சுதந்திரக் குடிமகன். நான் அரசாங்கத்தை மாற்றுவேன், ஆனால் என்னை மாற்றிக்கொள்ள மாட்டேன்.

இலக்கு இல்லாத பயணம் வெற்றி பெறுவதில்லை!

ஒரு மனிதன் வெற்றி பெற வேண்டுமானால் , தனது பாதையை சரியான முறையில் தேர்ந்தெடுக்க வேண்டும் .தனக்கு எது தெரியும் தனக்கு எது முடியும்

அதை அறிந்து செயல்படும் மனிதன் மட்டுமே வெற்றி பெறுகிறான். இலக்கு இல்லாமல் ஒவ்வொரு முயற்சி எடுத்து அதில் வெற்றி பெறாமல் அடுத்தடுத்து ஓடிக் கொண்டிருக்கிறான்.

முன்பொரு காலத்தில் ஒரு தீவில் பல காக்கைகள் ஒன்றாக வசித்து வந்தன. அவை எல்லாம் மிக கர்வத்துடன் பறவை இனங்களிலேயே தாமே வெகு உயர்ந்தவை என்று நினைத்துக் கொண்டிருந்தன. அப்பொழுது ஒரு நாள் அன்னப் பறவை ஒன்று அந்தத் தீவிற்குள் நுழைந்தது. தலைமை காக்கா அந்தப் பறவையை அணுகியது. "உனக்கு எப்படியெல்லாம் பறக்கத் தெரியும்?" என்று கேட்டது. "எனக்கு ஒரே ஒரு வழியில்தான் பறக்கத் தெரியும்" என்றது அன்னப் பறவை. "அப்படியா" என்றது காக்கை. "எனக்கோ 99 வழிகளில் பறக்கத் தெரியும்.

நம் இருவருக்குமிடையே ஒரு ஓட்டப் பந்தயம் வைத்துக் கொள்ளலாமா? இங்கிருந்து யார் முதன்முதலில் நம் தீவை அடைகிறார்களோ அவர்களுக்கே முதல் பரிசு. அது அங்கு தெரிகிறதே அந்த மகரயாழ் கடலின் நடுவில் இருக்கிறது. என்ன சொல்கிறாய்?" என்றது. "எனக்கு அவ்வளவாக பிடித்தமில்லை. நீ கட்டாயப்படுத்தினால் இந்தப் பந்தயத்தில் சேருகிறேன்" என்றது.

இரு பறவைகளும் கடலின்மீது பறந்தன. தனக்கு தெரிந்த வித்தைகளை எல்லாம் காக்கை செய்து காண்பித்தது. நேரே செங்குத்தாகப் பறந்து காண்பித்தது. பிறகு சுழன்று சுழன்று பறந்து காண்பித்தது. செங்கோணத்தில் பறந்தது. வளைந்து வளைந்து பறந்தது. ஆனால் சிறிது நேரத்திலேயே மிகவும் களைப்படைந்து விட்டது. நீருக்குள் சென்று கொண்டது.

அன்னப்பறவையோ படபடப்பில்லாமல், நளினமாகப் பறந்து சென்று கொண்டிருந்தது. பின்நோக்கிப் பார்த்தால், காக்கை அயர்ந்து போய் சுருண்டு நீருக்குள் மூழ்கிக் கொண்டிருப்பதைப் பார்த்தது. அந்த துரதிர்ஷ்டப் பறவை மீது கருணை கொண்டு, நீரில் அதைக் கொத்தி எடுத்துக் கொண்டு வந்து கரை சேர்ந்தது. காக்காய் சில கணங்களுக்கு ஓய்வு எடுத்துக் கொண்டது.

"நேராக நீ நினைத்த இடத்திற்குச் செல்ல ஒரே ஒரு வழி மட்டும் உனக்குத் தெரிந்திருந்தால் போதும். உன்னை



அந்த இடத்திற்கு கொண்டு செல்ல முடியாமல் தவிக்க வைத்த பல வழிகள் தெரிந்திருந்து என்ன பிரயோஜனம்?" என்றது அன்னப் பறவை.

உங்கள் மனம் இங்கும் அங்கும் அலைபாயும் பொழுது, நீங்கள் அந்த காக்கை போல ஆகி விடுகிறீர்கள். உங்கள் மனத்தில் அளவற்ற கற்பனைகள் எழுந்து ஒன்றுமே பிரயோஜனமில்லாமல் போய் விடுகிறது. ஆனால் உங்கள் மனத்தில் மாத்திரம் ஒருமுக கவனம் மிகுந்திருந்தால், அன்னப் பறவையை போல சீக்கிரம் இலக்கை அடைந்து வெற்றி காண்பீர்கள்.

யதார்த்த உலகில் வெற்றி காணவேண்டும் என்று நீங்கள் நினைத்தாலும் சரி, அல்லது ஆன்மிக வழியில் சென்று, தன்னையே உணர்தல் என்ற இலக்கை அடைவ தானாலும் சரி, ஒருமுக கவனமே உங்கள் இலக்கை கண்முன் காட்டிக் கொண்டிருக்கும். நீங்கள் அர்த்தமுள்ள வகையிலேயே அதை நோக்கி நகர்ந்து கொண்டே இருப்பீர்கள்.

கசப்பே மருந்தாகும்

முகம் வாடி சோர்ந்து இருக்காதீர்கள். சில விஷயங்கள் தள்ளிப் போகின்றதே என நினைத்தும் வருந்தாதீர்கள். அவைகள் தள்ளிப் போனாலும் சிறப்பான பல நிகழ்வுகள் உங்கள் வாழ்வில் நடக்கத்தான் தள்ளிப் போகின்றன என நம்புங்கள்.

அத்தகைய இறை நம்பிக்கை உங்கள் சோதனைகளைக் கடக்க உதவுவதோடு அதனை வெல்லும் சக்தியையும் கொடுக்கும்.

நம்பியவர்களுக்கு கசப்பு கொடுப்பார், எதிரிகளுக்கு இனிப்பும் கொடுப்பார், இறுதியில் கசப்பே மருந்தாகும். இனிப்பே நோயாகும். என்றும் அவர் பாதம் பணிந்திருங்கள்.

ஒரு வேளை சாப்பிடலைன்னா செத்துட மாட்டேன்னு அம்மாவிடம் காட்டிய திமிர்.. ஒரு வாயாச்சும் சாப்பிடுமான்னு தன் குழந்தையிடம் கெஞ்சிக் கொண்டிருக்கிறது.

உங்கள் வார்த்தைகளைக் காட்டிலும்... உங்கள் அமைதி உங்களுக்கு மதிப்பைக் கொடுக்கும்.

கறந்தப் பால் இரண்டு மணி நேரம் கெடாமல் இருக்கும்...

காய்ச்சினால் மேலும் பல மணி நேரம் இருக்கும்...

தயிராக்கினால் மேலும் இரண்டு நாள் கெடாமல் இருக்கும்...

வெண்ணையாக்கினால் ஒரு வாரம் இருக்கும்...

நெய் பல மாதம் கெடாமல் இருக்கும்...

நீயும் சூடுபட சூடுபட மெருகேறுவாய்.

நம் வாழ்க்கைக்கான தேடல்கள் சிறந்த அனுபவங்கள் தான்...

நாம் கடக்கும், கடந்த ஒவ்வொரு நபரும் நமக்குப் பாலமாகவும், அல்லது பலமாகவும், அல்லது பாடமாகவும் கிடைப்பதுதான் அனுபவம்...

சிறந்த அனுபவங்களைப் பெற, சில அவமானங்களையும், சில துரோகங்களையும், தீராத காயங்களையும் நம் மனம் சந்தித்தால்தான், மிகச்சிறந்த அனுபவத்தையும் மனத் தெளிவையும் பெற முடியும்.

கோபத்தைக் குறைத்துப் பாருங்கள், உங்கள் நிம்மதி அதிகரிக்கும். அகந்தையைக் குறைத்துப் பாருங்கள், உங்களைச் சுற்றி நல்லுறவுகள் பெருகும். வீண் பேச்சுகளைக் குறைத்துப் பாருங்கள், வீண் சண்டைகளும் குறையும். பிறர் குறை பேசாமல் இருந்துப் பாருங்கள், உங்கள் உள்ளம் தூய்மையடையும். சுயநலத்தைக் கைவிட்டுப் பாருங்கள், உண்மையான அன்பு உங்களைத் தேடி வரும்.

புன்னகைக்கப் பழகிப் பாருங்கள், பகைவர்களும் நண்பர்களாக மாறுவார்கள். மன்னிக்கப் பழகிப் பாருங்கள், உங்கள் மனதிலுள்ள பாரம் முற்றிலுமாக நீங்கும்.

பழி வாங்கும் எண்ணத்தை மறந்து பாருங்கள், உங்கள் ஆன்மா அமைதியடையும். கொடுத்த வாக்கைக் காப்பாற்றிப் பாருங்கள், உங்கள் மதிப்பும், மரியாதையும் அதிகரிக்கும். பிறருக்கு உதவி செய்து பாருங்கள், வாழ்வின் உண்மையான திருப்தி கிடைக்கும்.

நண்பர்கள் பற்றாக்குறை!

ஒவ்வொரு மனிதனின் வாழ்வில் உறவுகள் எப்படி முக்கியமோ அதுபோல அவரது நட்பு ரொம்ப முக்கியம். நட்பு என்பது ஒவ்வொருவர் வாழ்விலும் தவிர்க்க முடியாத ஒன்று என்பதை திருவள்ளுவர் தனது திருக்குறளை நட்புக்காக தனி அதிகாரத்தை ஒதுக்கி 10 குறளை அதற்காக இயற்றியுள்ளார்.

திரைப்படங்கள் காவியங்கள் இலக்கியங்கள் இவற்றில் நட்புக்கு முக்கியத்துவம் தரப்பட்டிருக்கிறது. மனிதர்கள் சமூகமாக இருக்கும்போது நட்புக்கு ஏற்பட்ட முக்கியத்துவம் இன்றைக்கு அந்த நட்பு இணையதளங்கள் வழியே மாறி விட்டிருக்கிறது. அந்த நட்பு உண்மையான நட்பு ஆழமான நட்பா என்பது அந்த நட்பின் தொடக்கத்தில் இருந்து முடியும் வரை இரண்டு பக்கமும் தேவைக்கேற்ப அமைவதுதான். எனவே அது முழுமை பெற்ற நட்பாக கருத முடியாது. நண்பர்களின் பற்றாக்குறை' இதைப் பற்றி யோசிக்க வேண்டிய நேரம் வந்துவிட்டது!_

இன்று உலகத்தை அச்சுறுத்தும் மிகப்பெரிய பிரச்சனைகளில் ஒன்று 'நண்பர்களின் பற்றாக்குறை'. நம்புவது கடினமாக இருந்தாலும் இது உண்மை.

புள்ளிவரங்கள் என்ன சொல்கின்றன?

1960ல் ஒரு நபருக்கு சராசரியாக 100 நெருங்கிய நண்பர்கள் இருந்தனர். 1990ல் அந்த எண்ணிக்கை 50ஆக குறைந்தது. 2020ல் அது வெறும் 10ஆக வந்துவிட்டது.

இப்போது? ஒரு உண்மையான நண்பர் கிடைப்பதே கஷ்டமாகிவிட்டது. சமீபத்திய ஆய்வின்படி நம் நாட்டில் 12% பேருக்கு மனம் விட்டுப் பேச ஒரு நண்பர் கூட இல்லையாம்.

ஒரு காலத்தில் நாளைக்கு குறைந்தது ஒரு மணி நேரம் நண்பர்களுடன் நேரில் செலவிட்டோம். இப்போது அது 35 நிமிடங்களாக சுருங்கிவிட்டது. ஸ்கிரீனுக்கு முன்னால் செலவிடும் நேரம் அதிகமானது, மனம் விட்டுப் பேசும் ஆட்கள் குறைந்துவிட்டார்கள்.

ஒருமுறை நல்ல நட்பு உருவான பிறகு அதை தக்கவைக்கவும் தினமும் கொஞ்ச நேரம் ஒதுக்க வேண்டும். செடிக்கு தண்ணீர் ஊற்றுவது போல, நட்புக்கும் 'பேச்சு' என்ற தண்ணீர் தேவை._

அலுவலக ரீதியான நட்புகள் என்று நாம் நினைப்பது பெரும்பாலும் தேவைக்காக, மேலோட்டமான வாழ்த்துகளே._ ஃபேஸ்புக்கில் 5000 நண்பர்கள், வாட்ஸ்அப்பில் 100 குரூப்கள் இருந்தாலும், கஷ்டத்தில் உதவ ஒருவரும் இருக்க மாட்டார்கள். இவை பெரும்பாலும் 'பொழுதுபோக்கு' பேச்சுகளே.

நட்பின் பிணைப்புகள் ஏன் அறுந்து போகின்றன என்றால் காரணங்கள் நிறைய இருக்கின்றன. டெக்னாலஜி, நியூக்ளியர் குடும்பங்கள், போட்டி நிறைந்த உலகம்... ஆனால் எல்லாவற்றையும் விட பெரிய காரணம் ஒன்றே. "நேரமில்லை நண்பா!"

பணம் சம்பாதிக்கும் இயந்திரங்களாக மாறிவிட்டோம். உறவுகளை தக்கவைப்பதை மறந்துவிட்டோம்.

நாளில் 15 நிமிடமாவது நண்பர்களுக்கு போன் செய்து பேசுங்கள். வாரத்தில் ஒருமுறையாவது சந்தியுங்கள்.

சந்திக்கும்போது போனை ஓரமாக வைத்துவிட்டு மனம் விட்டுப் பேசுங்கள். வாக்கிங் போகும்போது, மக்களுடன் பேச்சு கொடுங்கள்.

சின்ன சின்ன கோபங்களுக்காக விலைமதிப்பற்ற நட்பை விட்டுவிடாதீர்கள். நல்ல நண்பன் தான் ஏமாற்ற மாட்டான் எதற்காகவும் விட்டுக் கொடுக்க மாட்டான் உயிரையும் கொடுப்பான் தன் உடமைகளையும் கொடுப்பான் அவனே நண்பன் பெற்றவர்களுக்கு நிகரானவன் உயிரினும் மேலானவன் உதவிட அவனைத் தவிர எவனும் இல்லை உறவுகள் விலகும் கோபத்தால் நண்பன் இருக்கும் வரை இருப்பான் இறந்த பிறகும் நினைப்பான்நல்ல நண்பர்களை தொடர நாமும் நல்ல நண்பராக இருப்போம்!

எம் பதில்கள்

சார், இந்த மாத வாழ்க்கைத் தத்துவம் சொல்லுங்க!

கோ.வடிவேல் முருகன் அருப்புக்கோட்டை.

வாட்ஸ் அப் பேஸ்புக் இன்ஸ்டாகிராம் ஆகியவற்றில் தவறான செய்திகள் இருந்தாலும் வாழ்க்கைக்கு தேவையான நிறைய தத்துவங்கள் வருகிறது . அதில் நான் படித்ததில் பிடித்ததை உங்களுக்கு சொல்லுகிறேன்.

சிரிக்க தெரிந்த மனிதனுக்கு, சிறக்க தெரியும்...

பார்க்க தெரிந்த மனிதனுக்கு, வழிகள் தெரியும்...

உழைக்க தெரிந்த மனிதனுக்கு, வெற்றிகள் தெரியும்..

நினைக்க தெரிந்த மனிதனுக்கு, செயல்களை தொடங்க தெரியும்...

சிலருக்கு நன்மைகள் செய்வதோடு நின்றுவிட வேண்டும்... சிலருக்கு நல்லவை சொல்வதோடு நின்றுவிட வேண்டும்... சிலருக்கு நல்லது நினைப்பதோடு நின்றுவிட வேண்டும்... சில நேரங்களில் தவறான புரிதலும்_

முன் கோபமும் சரியான நபரை இழக்கச் செய்து விடும். மகிழ்ச்சி என்பது உங்கள் வீட்டில் விளைவது. அதை மற்றவர் தோட்டத்தில் தேடாதீர்கள்.

கிரீன் இந்தியா சேலஞ்ச் அமைப்பு பற்றி...

அசோக் குமார், திருத்தணி

கிரீன் இந்தியா சேலஞ்ச் (Green India Challenge) என்பது இந்தியாவில் சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாக்கவும், மரங்களை வளர்க்கவும் தொடங்கப்பட்ட ஒரு மிகப்பெரிய மக்கள் இயக்கமாகும்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோகினிப்பள்ளி சந்தோஷ் குமார் (J. Santhosh Kumar) என்பவரால் 2018 ஆம் ஆண்டு இது தொடங்கப்பட்டது.

ஒவ்வொரு நபரும் குறைந்தபட்சம் 3 மரங்களை நட்டு, அவற்றை 3 ஆண்டுகள் நன்கு பராமரிக்க

வேண்டும். மரங்களை நட்ட பிறகு, வேறு மூன்று பேருக்கு இந்தச் சவாலை விடுத்து அவர்களை மரக்கன்றுகள் நட ஊக்கப்படுத்த வேண்டும்.

தற்போதைய இயக்கம்: கோதாவரி நதிப் படுகை பகுதிகளில் மரங்களை வளர்க்கும் நோக்கில் இதன் 9வது பதிப்பு ஜூலை 2026 இல் தொடங்கப்பட்டுள்ளது.

இணைப்பில் பங்குபெற மற்றும் விபரங்களை அறிய Igniting Minds தளத்தைப் பார்க்கலாம்.

சுற்றுச்சூழலுக்கு உகந்த 'விதை விநாயகர்' (Seed Ganesha) சிலைகளை நடிகர் சிரஞ்சீவி அவர்கள் ஹைதராபாத்தில் உள்ள தனது இல்லத்தில் சமீபத்தில் அறிமுகப்படுத்தி வைத்துள்ளார்.

இந்த சிலைகள் இயற்கை களிமண் (Clay), தேங்காய் நார்க்கழிவு (Cocopeat), மற்றும் தேங்காய் நார் கொண்டு செய்யப்படுகின்றன. இச்சிலைகளுக்குள் வேம்பு, புளி போன்ற பாரம்பரிய மற்றும் மருத்துவ குணம் கொண்ட மரங்களின் விதைகள் வைக்கப்பட்டுள்ளன.

பூஜைக்குப் பிறகு, இந்த சிலைகளை

நீர்நிலைகளில் கரைத்து மாசுபடுத்துவதற்குப் பதிலாக, மக்கள் தங்கள் வீடுகளிலேயே தொட்டிகளில் தண்ணீர் ஊற்றி கரைத்துக் கொள்ளலாம்.

செடியாக வளரும்: சிலைகள் கரைந்த பிறகு, அதிலுள்ள விதைகள் முளைத்து அழகான செடியாகவும், மரமாகவும் வளரும். "கடவுளே செடியாக மாறி நமக்கு அருள்பாலிக்கிறார்" என்று சிரஞ்சீவி நெகிழ்ச்சியோடு குறிப்பிட்டுள்ளார்.

பிளாஸ்டர் ஆஃப் பாரிஸ் (PoP) மற்றும் ரசாயன வண்ணங்களால் செய்யப்படும் சிலைகள் நீர்நிலைகளை மாசுபடுத்துவதால், இந்த ஆண்டு விநாயகர் சதுர்த்திக்கு அனைவரும் இதுபோன்ற 'விதை விநாயகர்' சிலைகளைப் பயன்படுத்தி இயற்கையைப் பாதுகாக்க வேண்டும் என்று மெகாஸ்டார் சிரஞ்சீவி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இயற்கை பேரழிவை முன்கூட்டியே கணிக்க முடியவில்லையே?

பாலாஜி செல்வன், கோவை

உண்மைதான். சுனாமி ,ஆழி பேரலை, பூகம்பம் போன்ற இயற்கை சீற்றங்கள் எதிர்பாராத விதத்தில் வந்து உயிர்களையும் உடைமைகளும் சேதப்படுத்தி மக்கள் அன்றாட வாழ்வை நிலைகுலையச் செய்து விடுகின்றன. அப்படித்தான் சமீபத்தில் நேபாளத்தில் ஏற்பட்ட பெரு வெள்ளம் அனைவரது நெஞ்சத்தையும் உலுக்கி விட்டது.

தமிழகத்திலிருந்து ஆன்மீகப் பயணம் சென்றவர்கள் இன்னும் சில பேர் எங்கு இருக்கிறார்கள் என்பதே தெரியாத சோகம்.

நேபாளத்தின் வடக்கு ராசுவா பகுதியில் ஏற்பட்டுள்ள திடீர் பெருவெள்ளம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. தொடர் கனமழை மற்றும் பனிப்பாறைகள் உருகியதால் போட்டே கோஷி ஆற்றில் நீர்வரத்து அதிகரித்து, பல கிராமங்கள் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டுள்ளன. இந்த பேரிடரில் தமிழர்கள் உட்பட 400க்கும் மேற்பட்ட இந்தியர்கள் சிக்கியுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

நேபாளத்திற்கு புனிதப் பயணம் மற்றும் சுற்றுலா சென்ற தமிழகத்தைச் சேர்ந்த 57 பேர் ராசுவா மாவட்டத்தின் திமுர் பகுதியில் சிக்கியுள்ளனர்.

இவர்களில் சென்னை, தஞ்சாவூர், கும்பகோணம், திருச்சி உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்தவர்கள் இருப்பதாக தெரியவந்துள்ளது. குறிப்பாக, கும்பகோணம் பகுதியைச் சேர்ந்த 100க்கும் மேற்பட்டோர் மூன்று பேருந்துகளில் நேபாளத்தின் மலைப்பகுதிக்கு சென்றுள்ளனர்.

அவர்களில் 50க்கும் மேற்பட்டோர் பயணித்த ஒரு பேருந்து வெள்ளத்தில் சிக்கியதாக கூறப்படுகிறது. இருப்பினும், அதிர்ஷ்டவசமாக அவர்கள் அங்கிருந்து தப்பித்து திமுர் பகுதியில் உள்ள பாதுகாப்பான ராணுவ முகாமில் தஞ்சமடைந்துள்ளனர்.

வெள்ளத்தில் சிக்கியிருந்த கும்பகோணத்தைச் சேர்ந்த 22 தமிழர்கள் பத்திரமாக மீட்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. மீட்கப்பட்டவர்கள் நேபாள ராணுவ முகாமில் பாதுகாப்பாக தங்க வைக்கப்பட்டுள்ளனர். அமைச்சர்கள் ஆதவ் அர்ஜுனா, ராஜ்மோகன், தென்னரசு மற்றும் வினோத் ஆகியோர் அடங்கிய நால்வர் குழு டெல்லிக்கு விரைந்து மீட்புப் பணிகளை மேற்கொண்டது!

கொசுறு கவிதை

கொசு
பறந்ததப் பார்த்திருப்ப
உக்காந்ததப் பார்த்திருப்ப
கடித்ததப் பார்த்திருப்ப
பேசுனதப்
பாத்திருக்கியா ?
பாத்திருக்கியா ?
இப்ப பாரு.....

அந்த ஏரியா
இந்த ஏரியா
எந்த ஏரியாவா இருந்தாலும்
அது நம்ம ஏரியா தான்....

நீ "ஆலவுட் போட்டா"
என்னை
துரத்த தான் முடியும்.....
ஆனால்
"நான் போட்டா "
உன்னைத் "தூக்கவே" முடியும்.....

நான்
எப்படி வருவேன்
எப்பொழுது வருவேன் என்று
தெரியாது
ஆனால்
வர வேண்டிய
நேரத்துக்கு
சரியா வருவேன்.......
இஇஇது எப்படி இருக்குது...?

என்ன பாக்குற
"சூப்பர் மேன்" தான்
பஞ்சு சொல்லுவான்னு
நினைச்சியா?
"பைடர் மேன்னும்"
பஞ்சு சொல்வான்.....

நீ அடிச்சா
நான் அழுவ மாட்டேன்
நான் கடிச்சா
நீ அழுவமாட்ட
உன்னை சுத்தி
நான்கு பேர் அழுவாங்க....

சாக்கடை கால்வாயில்
கழிவு நீரை
தேங்க வைத்துவிட்டு
கதவு ஜன்னலை
சாத்தி வைத்தால்
வீட்டுக்கள் நான் பறப்பதை
தடுக்க முடியும்
நாட்டுக்குள் நான் பிறப்பதை
தடுக்க முடியுமா டுமுக்கு...

நாங்கள்
உங்கள் காதில்
"கச்சேரி " வைப்பதில்லை
முட்டாள் பயலே......!
சுற்றுச்சூழலை
மாசடைந்து விட்டது என்று
உங்கள் காதோரம்
"வந்து கத்துகிறோம்"
புரிந்ததா....?

ஒரு சொட்டு ரத்தம்
குடிப்பேனே என்னவோ
அதற்கு
கொசுவலை
கொசுவர்த்தி
ஆலவுட்
கொசு பேட்
ஃபேன் என்றெல்லாம்
வாங்குகிறாய்
தற்குறிகளே!
கழிவுநீர் கால்வாயில்
நீர் தேங்கும் இடங்களில்
சிறிதளவு
மண்ணெண்ணை
ஊற்றி வைத்தாலே
நான் வரமாட்டேன்....

போ போய்
ஐஸ்லாந்து நாட்டில் கேள்
சுற்றுச்சூழலை
எப்படி பராமரிப்பது என்று
ஏன்னா ?
அங்கு தான்
நான் இல்லை.....

மனித இனத்தின்
பெண் பாடாபடுத்துவாள்
சிங்க இனத்தில்
பெண் சிங்கம் வேட்டையாடும்
யானை இனத்தில்
பெண் யானை வழிநடத்தும்
எங்க இனத்தில்
பெண் கொசு தான் கடிக்கும்
எல்லா இடங்களிலும்
மனைவி ராஜ்ஜியமே...

குட் நைட் வைத்து
தூங்கி பழகியது போதும்
இனியாவது
சுற்றுப்புறத்தை
தூய்மையாக வைத்து
வாழப்பழகு

சரி சரி வருகிறேன்
ஓ ஸாரி.... போகிறேன்....!!!
- கவிதை ரசிகன் குமரேசன்

தங்கத்தின் விலை அன்றும் இன்றும்!

ஒரு சவரன் விலை

1947 – ₹88.62
1948 – ₹95.87
1949 – ₹94.17
1950 – ₹99.18
1951 – ₹98.05
1952 – ₹76.81
1953 – ₹73.06
1954 – ₹77.75
1955 – ₹79.18
1956 – ₹90.81
1957 – ₹90.62
1958 – ₹95.38
1959 – ₹102.56
1960 – ₹111.87
1961 – ₹119.35
1962 – ₹119.75
1963 – ₹97.00
1964 – ₹63.25
1965 – ₹71.75
1966 – ₹83.75
1967 – ₹102.50
1968 – ₹162
1969 – ₹176
1970 – ₹184
1971 – ₹193
1972 – ₹202
1973 – ₹278.50

1974 – ₹506
1975 – ₹540
1976 – ₹432
1977 – ₹486
1978 – ₹685
1979 – ₹937
1980 – ₹1,330
1981 – ₹1,670
1982 – ₹1,645
1983 – ₹1,800
1984 – ₹1,970
1985 – ₹2,130
1986 – ₹2,140
1987 – ₹2,570
1988 – ₹3,130
1989 – ₹3,140
1990 – ₹3,200
1991 – ₹3,466
1992 – ₹4,334
1993 – ₹4,140
1994 – ₹4,598
1995 – ₹4,680
1996 – ₹5,160
1997 – ₹4,725
1998 – ₹4,045
1999 – ₹4,234
2000 – ₹4,400

2001 – ₹4,300
2002 – ₹4,990
2003 – ₹5,600
2004 – ₹5,850
2005 – ₹7,000
2006 – ₹8,400
2007 – ₹10,800
2008 – ₹12,500
2009 – ₹14,500
2010 – ₹18,500
2011 – ₹26,400
2012 – ₹31,050
2013 – ₹29,600
2014 – ₹28,006
2015 – ₹26,343
2016 – ₹28,623
2017 – ₹29,667
2018 – ₹31,438
2019 – ₹35,220
2020 – ₹48,651
2021 – ₹48,720
2022 – ₹52,670
2023 – ₹65,330
2024 – ₹77,913
2025 – ₹1,03,870
2026 – ₹1,63,500
2026 – ₹?

இயல்பாய் இரு

– ஒரு பக்க கதை

ஓர் அலுவலகத்தில் வேலை பார்க்கும் அந்த இளைஞன், தன்னுடன் வேலை பார்க்கும் இளம்பெண் ஒருவரைக் காதலித்தான். முதலில் தயங்கியவன் பிறகு தைரியத்தை வளர்த்துக் கொண்டு தன் காதலைச் சொல்லிவிட்டான். அவள் அந்தக் காதலை ஏற்றுக் கொள்ளவில்லை. அதே சமயம் அவன் காதலைச் சொன்னதைக் குற்றமாகவும் கருதவில்லை. "நீங்கள் காதலிப்பது உங்கள் உணர்வு. ஆனால் எனக்கு உங்களைப் பற்றி அதிகம் தெரியாது. எனக்கு உங்கள் மேல் எந்தக் காதல் உணர்வும் இல்லை" என்று தெளிவாகச் சொல்லிவிட்டாள். இதைக் கேட்டு அவன் சிறிது சோர்ந்து போனான். நண்பர்களிடம் சொன்னான். அவர்கள் அந்த இளம்பெண்ணை ஈர்க்க பல யோசனைகளைச் சொன்னார்கள். அதன்படி தன்னை மிக சோகமாக அவள் முன்னால் காட்டிக் கொண்டான். தாடி எல்லாம் வைத்துக்கொண்டு திரிந்தான். அவள் கண்டுகொள்ளவில்லை. திடீரென்று தாடியை மழித்து இன்னும் ஸ்டைலாக உடை அணிந்து கொண்டு வந்து, அளவுக்கு மீறிய உற்சாகத்துடன் நடந்து கொண்டான். அப்போதும் அவள் கண்டுகொள்ளவில்லை.

ஒருமுறை அலுவலகம் அருகே உள்ள நீண்ட ஏ.டி.எம் கியூவில் அவள் நின்றிருந்தபோது, அவனாக வந்து மற்றவர்களிடம் பேசி, 'அவசரமாகப் பணம் எடுக்க வேண்டும்' என்று நம்ப வைத்து அவளை வலுக்கட்டாயமாக முன்னால் அழைத்துச் சென்று முதலில் பணமெடுக்க உதவினான். இன்னொரு முறை அவள் தோழிகளுடன் சாப்பிட்டுக் கொண்டிருந்தபோது இவன் வீட்டில் செய்த தின்பண்டங்களை எடுத்துவந்து, "அம்மா செய்தாங்க. நல்லா இருக்கும்" என்று கொடுத்து விட்டுச் சென்றான்.

திடீரென்று ஒரு மாலை வேளையில் அலுவலகத்துக்கு வெளியே அவன் அம்மா, அப்பா, தங்கை அனைவரையும் அழைத்து வந்து அறிமுகப்படுத்தினான். அவர்களோடு அன்று உணவகத்தில் விருந்து உண்ண வேண்டிய கட்டாயத்துக்கு அவள் ஆளானாள். ஒருமுறை அவளுக்கு உடல்நிலை சரியில்லை என்று தெரிந்ததும், அவள் தோழி ஒருத்தியைக் கட்டாயப்படுத்தி அழைத்துக்கொண்டு அவள் வீட்டுக்கே வந்து விட்டான். சாதாரண காய்ச்சலுக்கு கூடை நிறைய பழங்களும் மலர்களும் வாங்கிவந்து கொடுத்தான். அவளுடைய பிறந்த நாளுக்கு அருகில் உள்ள ஆதரவற்றோர் இல்லத்தில் மதிய உணவு ஏற்பாடு செய்து, திடீரென அவளை அழைத்துப் போய் அவள் கையாலேயே அங்குள்ள குழந்தைகளுக்குப் பரிமாற வைத்தான். இப்படி அவளை ஈர்க்க பல காரியங்களைச் செய்துகொண்டே இருந்தான். முடிவாக அவனுக்கு ஒரு வாட்ஸ்அப் செய்தி அவளிடமிருந்து வந்தது. 'இன்று மாலை வெளியே டின்னர் போகலாமா?' இதைப் பார்த்த அவன் மகிழ்ச்சியின் எல்லைக்கே போய்விட்டான். மாலை இருவரும் உணவகத்தில் சந்தித்துக் கொண்டனர். "நான்தான் பில் கொடுப்பேன்" என்றான் அவன். "ஏன்? நாம் இருவரும் ஒரே சம்பளம்தானே வாங்குகிறோம். நான் ஏன் கொடுக்கக் கூடாது?" என்றாள் அவள். அதைக் கேட்டு அவன் முழித்தான். "இதுதான் உன் பிரச்னை. நீ செய்வது நற்காரியம் என்றாலும், அது அடுத்தவருக்குப் பிடிக்கிறதா, பிடிக்கவில்லையா என்று தெரிந்து கொள்ளாமல் அவர்களை வசதிக்குறைவாக ஆக்குவதுதான் உன் பிரச்னை." "எனக்குப் புரியவில்லை" என்று அவன் திணறினான்.

அவள் தொடர்ந்தாள். "நீ என்னிடம் உன் காதலை சொன்னாய். எனக்கு அப்படி ஓர் உணர்வு வரவில்லை என்றேன். உடனே என்னை ஈர்ப்பதாக நினைத்து பல காரியங்களைச் செய்துகொண்டே இருந்தாய். நல்ல விஷயங்கள்தான். ஆனாலும் என் மனதில் உன் மீது காதல் உணர்வு ஏற்படவில்லை. ஆனால் அதை எல்லாம் கவனிக்காமல் எனக்கு நன்மை செய்து கொண்டே இருக்கிறாய். இதனால் குறிப்பிட்ட காலத்தில் எனக்கு குற்ற உணர்வு ஏற்படும். 'ஐயோ, இவன் நம் மேல் இவ்வளவு அன்பு வைத்திருக்கிறானே' என்று எனக்குள் வராத காதலை ஒரு நன்றிக் கடனுக்காக வந்ததாக நடிக்க ஆரம்பிப்பேன். நான் உன்னைக் காதலிப்பதாக நீ நினைப்பாய். ஆனால் அது ஆழ்மனதில் இருந்து வரும் காதலாக இருக்காது. பிற்காலத்தில் நம் இருவருக்கும் இதனால் பிரச்னைதான் வரும்..." அவனுக்குப் புரிந்தது. அவள் தொடர்ந்தாள்... "காதலில் ஆண் பெண்ணை ஈர்க்க எதையும் செய்யவே கூடாது என்று சொல்லவில்லை. ஆனால் அந்த செயல்களால், 'நீ என்னைக் காதலித்தே ஆகவேண்டும்' என்று நெருக்குவது தவறு. அது அவளுக்கு வசதிக்குறைவான உணர்வையே கொடுக்கும். காதல் உணர்வைக் கொடுக்காது" என்றாள். "சரி, நான் இனி இயல்பாய் இருக்கிறேன். உனக்கு என்னைப் பிடித்திருந்தால் எப்போது வேண்டுமானாலும் சொல். பிடிக்காவிட்டாலும் பரவாயில்லை" என்றான் அவன். "மகிழ்ச்சி" என்று சொல்லி, பில்லுக்கான பணத்தை தன் பர்ஸைத் திறந்து வைத்தாள் அவள்.

மித்ரா குழும இயக்குனர் **செல்வி. ஸ்ருதிலட்சுமி** அவர்களின் பிறந்தநாள் கொண்டாடப்பட்டது.
மித்ரா டைம்ஸ் ஆசிரியர் **திரு.எம்.எஸ்.மூர்த்தி** அவர்கள் கலந்து கொண்டு வாழ்த்தினார்

சதாபிஷேக விழா!

சென்னை நுங்கம்பாக்கம் சித்ரா அவென்யூ வில் இருக்கும் திரு. மீனாட்சி சுந்தரம் – திருமதி.சசிகலா தம்பதியரின் சதாபிஷேக விழா நடந்தது. இந்த விழாவில் மித்ரா டைம்ஸ் வெளியீடான பெண் உலகம் மாத இதழின் ஆசிரியர் திருமதி. சுஜாதா மூர்த்தி அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார். உடன் திரு. மீனாட்சி சுந்தரம் குடும்பத்தினர்.

பத்திரிகைத் துறையில் 50 ஆண்டுகள்: மதுரை விஜயா கண்ணன் பொன்விழா பயணம்!

பத்திரிக்கை உலகில் 50 ஆண்டுகளுக்கு மேலாக சிறந்த செய்தியாளராக மதுரை விஜயா கண்ணன் அவர்கள் செயல்பட்டு வருகிறார்கள். தமது மனைவி விஜயா பெயரை தன் பெயருடன் இணைத்து பணியாற்றி வரும் திரு.கண்ணன் அவர்கள் கடந்து வந்த பயணத்தை பார்ப்போம்.

சாதாரண மனிதர்கள் முதல் சாதனை படைத்த மனிதர்கள் வரை அனைத்து தரப்பினரையும் பேட்டி எடுத்து பத்திரிகைகளுக்கு அனுப்பி அவர்களுக்கு பெருமை சேர்த்து வருபவர் விஜயா கண்ணன். தொழில்துறை கல்வித்துறை சினிமாத்துறை என்று பல்வேறு துறைகளில் உள்ள ஆளுமைகளை அடையாளம் கண்டு அவர்களின் பெருமைகளை வெளி உலகத்துக்கு எடுத்துச் செல்பவர் திரு .விஜயா கண்ணன்.

இந்தத் துறைக்கு இவர் வருவதற்கு முன்னோடியாக இவருக்கு இருந்தவர் இவரது தந்தை என்பது சிறப்புக்குரிய விஷயமாகும். தேவ கோட்டையைச் சேர்ந்த சுதந்திர போராட்ட தியாகி திரு.ஸ்ரீனிவாசா ஐயங்கார் மகன் இவர். இவரது தந்தை பல ஆண்டுகளாக வெளிவரும் பிரபல தமிழ் நாளிதழில்

திரு.விஜயா கண்ணன் அவர்களின் தந்தை ஸ்ரீனிவாசா ஐயங்கார்

முன்னணி கல்வி நிறுவனத் தலைவருடன்

மனைவி திருமதி.விஜயாவுடன் திரு. கண்ணன்

பட்டிமன்ற நடுவர் பேராசிரியர் திரு.கு.ஞானசம்பந்தம் அவர்கள் திரு.விஜயா கண்ணன் அவர்களுக்கு சால்வை அணிவிக்கிறார்

இயக்குநர் இமயம் பாரதிராஜா அவர்களால் கௌரவிக்கப்படும் விஜயா கண்ணன்

POSTED AT EGMORE/RMS. PATRIKA CHANNEL. POSTED ON. 1-7 September 2026
MITRA TIMES Tam & Eng Monthly Postal Registration No. TN/CH(C)/523/2025-2027
Registered with Registrar of News Paper for India Under No.TNBIL/2015/64028 - Date of publishing 1st week of Every Month
WPP No. TN/PMG(CCR)/WPP-609/2025-2027

திருமதி.அமுதா ஐ.ஏ.எஸ். அவர்களுடன் நேர்காணலில் திரு.விஜயா கண்ணன்...

பின்னணி பாடகர் திரு.டி.எம்.எஸ் அவர்களுடன்

ஜோதிடம் தொடர்பான கட்டுரைகளை எழுதி புகழ் பெற்றவர். உயர் பொறுப்பில் இருக்கும் ஜோதிடத்தை முழுமையாக நம்பும் ஆளுமை மிக்க அரசியல்வாதிகள் இவரது தந்தையாரிடம் ஆலோசனை கேட்டு அதன்படி நடந்திருக்கிறார்கள். இதன் பின்னணியில் தன் தந்தையை பின்பற்றி இவரும் பத்திரிக்கை துறையில் காலடி பதித்து அதில் முத்திரை பதித்து வருகிறார்.

படித்துக் கொண்டிருக்கும் போதே பத்திரிக்கைகளுக்கு ஜோக் துணுக்குகள் அனுப்பி தன்னுடைய பத்திரிகை உலக பயணத்துக்கு அடித்தளம் அமைத்துக் கொண்டார். ஏறத்தாழ 50 ஆண்டுகளுக்கு மேலாக இந்த துறையில் சிறந்து விளங்கும் இவரது பணி தொடர்ந்து நடந்திட மித்ரா டைம்ஸ் சார்பில் வாழ்த்துகிறோம்.

மகளிர் குழுவினருடன்

From:

MITRA TIMES ,Tamil and English monthly 101,Inchakkal Block, Chitra Avenue 9, Choolaimedu High Road, Chennai .600094. 044-23744661,23743007/8. mitratimes2015@gmail.com, www.mitratimes.com

Printed, Owned and Published by M.SUNDARAMOORTHY, Printed at SRI PADMALAYA PRINTERS, No.8/18, Manali Salai, Korukupet, Chennai - 600 021. Published at No.602, Suruthi Block, Chitra Avenue, No.9, Choolaimedu High Road, Chennai - 600 094. Editor M.SUNDARAMOORTHY